# இலங்கையின் உள்ளூராட்சி மன்ற வரவு செலவுத் திட்டச் செயல்முறை பற்றிய ஓர் பகுப்பாய்வு


பென் பௌலர்
சிறியானி விஜேசுந்தர
மஞ்சுள கஜநாயக்க



*நல்லாட்சிக்கான வேலைத்திட்டம்*
*மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்*
*கொழும்பு -07*

*செப்டெம்பர் 2013*

வெளியீடு : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

கணனி வடிவமைப்பு : ராஜேந்திரன் லக்ஷ்மி

பக்க வடிவமைப்பு : சுஜித் குமார

மாற்றுக்கொள்கை நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பொன்றாவதோடு பிரதானமாக அரசாக்கம், முரண்பாடுகளை தீர்த்தலும் அதனுடன் இணைந்த முரண்பாடுகளின் பால் அவதானம் செலுத்தும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் 1996ம் ஆண்டு அமைக்கப்பட்டதற்கான காரணம் பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாசனைக்கான சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கையை கொண்டுள்ளது. பொது மக்களின் கொள்கை விமர்சண ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இணங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பாக ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணித்துள்ளது.

விலாசம் : 24/2, 28ம் ஒழுங்கை,
ப்.்.ளவர் வீதி, கொழும்பு – 07.

தொலைபேசி 011-2565304-6

தொலைநகல் : 011-4714461

மின்னஞ்சல் : www.cpalanka.org
sriyanie@cpalanka.org

ISBN : 978-955-4746-15-2

## பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 3 |
| குடிமக்கள் சார்ந்த வரவுசெலவுத் திட்ட எண்ணக்கரு | 4 |
| பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடல் | 5 |
| உள்ளூராட்சி வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகள் மற்றும் அதன் உபகாரிகள் என்பவற்றுக்கிடையிலான ஜனநாயக இடைவெளி | 7 |
| பிரதேச சபைகளினுள் இறைரீதியான விடயங்கள் | 15 |
| உள்ளூர் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் | 21 |
| பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்டச் செயன்முறையினுள் உள்ளூர் பாத்தியதை கொண்டவர்களின் குரல்கள் | 24 |
| யக்கலமுல்ல பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் 08.08.2011 அன்று நடைபெற்ற கூட்டம் | 32 |
| தேசியப் பின்னணியில் வரவுசெலவுத் திட்டச் செயன்முறை | 35 |
| எண்ணங்களும் பிரதிபலிப்புகளும் | 39 |
| உசாத்துணைகள் | 40 |

# முன்னுரை

இந்த ஆய்வு , பிரதேச சபைகளில் வரவுசெலவுத் திட்டத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்தின் வெளிப் பாடாகும். இந்த வேலைத்திட்டத்தின் குறிக்கோள் வரவுசெலவுத் திட்டமிடல் மற்றும் திட்டமிடுதல் செயன்முறைகளில் பிரஜைகளின் விழிப்புணர்வு மற்றும் பங்குபற்றுதலை அதிகரிப்பதுடன், அத்தகையதொரு குறிக்கோள் மூலமாக கூடுதல் வினைத்திறனானதும் மற்றும் பொறுப்புக்கூறுகின்றதுமான பிரதேச சபைகளை வளர்ப்பதாகும். அவை உள்ளூர்ப் பிரஜைகள் மற்றும் அவர்களது கரிசனைகளை கூடுதல் பயனுறுதியான வகையில் பிரதிபலிப்பதால், பிரதேச சபைகளின் ஜனநாயகப் பலத்தையும் இது அதிகரிக்கும். கடந்த வருடங்களின் வேலைத்திட்டத்தின் போது பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடல் மீதான யக்கலமுல்ல செயலமர்வு போன்ற (ஆய்வுக் கட்டுரையில் கலந்துரையாடப் பட்டவாறு) வேறுபட்ட அனுபவங்களை நாங்கள் எதிர்கொண்டோம். இதன் விளைவாக நாங்கள் பரிந்துரைத்த சில மக்கள் அரங்குகள் பிரதேச சபை நடைமுறைகளில் செயற்றிறன் கொண்டவையாகின. தகவல் பகிர்வுகளும் கூட அதிகரித்தன. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை என்பவற்றின் முக்கியத்துவம் நடைமுறைகள் முழுவதிலுமாக தெளிவாகு மென்பதினால், ஆய்வில் பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றின் கலந்துரையாடலின் போது ஏனைய நன்மைகள் தெளிவாகத் தெரியவரும்.

## குடிமக்கள் சார்ந்த வரவுசெலவுத் திட்ட எண்ணக்கரு

ஒரு நாட்டினது சனத்தொகையின் தேவைகளை அங்கீகரிப்பதற்கான ஓர் முக்கியமான சாதனம் வரவுசெலவுத் திட்டமாகும். அது குடிமக்களின் தேவைகளுக்கு சேவையாற்றும் நேசைய புநழசபந ஏதைநனெசயாக்குடன் ஒன்றுதிரட்டப்பட்ட வரிசெலுத்துவோரின் திரட்டிய நிதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. வரவுசெலவுத் திட்டமென்பது அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்குமான ஒரு கருவியும் கூட. அபிவிருத்தியைப் பொறுத்த வரை வரவுசெலவுத் திட்டம், வரிசெலுத்துவோரின் நிதியைச் செலவிடுதலின் மூலமாக ஓர் நாட்டிலுள்ள சமூக ஏற்றத் தாழ்வுகளை சீர்செய்வதற்கும் மற்றும் தனியார் துறை அங்கீகரிப்பதற்குத் தவறிய அபிவிருத்திகள் மீது கவனம் செலுத்துவதற்கும் முனைகிறது. நிர்வாகத்தைப் பொறுத்த வரை, வரவுசெலவுத் திட்டமானது வரிசெலுத்துவோரின் நிதியின் பயன்பாட்டை இடைக்கால அறிக்கைகளுடன், சரியானதும் மற்றும் சம்பந்தப்பட்ட தகவல்களுடனும் வருடாந்த அடிப்படையில் பயனுறுதியான வகையில் பதிவுசெய்து கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கின்றது. முகாமைத்துவத்தைப் பொறுத்த வரை, தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் நிதிகளின் ஒதுக்கீடு என்பன வினைத்திறனானதும் மற்றும் ஜனநாயக ரீதியிலுமாக மேற்கொள்ளப்படலாம் என்பதினால் செலவினங்கள் ஓர் தீர்க்கமான வகையில் ஒருங்கிணைக்கப்பட முடியும். ஆகையால், இந்த முக்கியமான நன்மைகள் தடை செய்யப்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு வரவுசெலவுத் திட்டத்தைச் சுற்றியுள்ள பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

இலங்கையினுள் மூன்று வரவுசெலவுத் திட்டப் பரப்புகள் உள்ளன. அவை தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி என்பவையாகும். இந்த ஆய்வுக் கட்டுரை பிரதானமாக உள்ளூராட்சி வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக, மேலும் குறிப்பாக பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் மீது கவனம் செலுத்தும். இந்த ஆய்வு, வரவுசெலவுத் திட்டத்தின்

சுழற்சிவட்டத்தைப் பகுப்பாரய்வதுடன் இச் செயன்முறை முழுவதும் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை, அவற்றை தீர்ப்பதற்கான பரிந்துரைகளுடன் கவனத்தில் கொள்ளும். எவ்வாறாயினும், இறுதிக் கட்டுரை தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து அதன் உள்ளார்ந்த பிரச்சினைகளை கலந்துரையாடும்.

இந்த பகுப்பாராய்தல் ஆய்வு, உள்ளூராட்சி வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளில் ஈடுபட்டுள்ளோர்களின், அதாவது அரசியல்வாதிகள், உள்ளூர் பிரஜைகள், சிவில் சமூக ஸ்தாபன பிரதிநிதிகள், ஊடகம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்களையும் வழங்குவதுடன் சிறந்த கொள்கைக் கட்டமைப்புக்கான அவர்களது பரிந்துரைகளுடன், அவர்கள் முகங் கொடுக்கின்ற குறுக்கு மற்றும் நெடுக்கு வாட்டுகளிலான தடைகள் குறித்தான பார்வையையும் அளிக்கின்றது. ஆகையால், இந்த ஆய்வானது எதிர்காலத்துக்கான யதார்த்தமானதும் மற்றும் நிறைவேற்றப்படக்கூடியதுமான கொள்கைப் பரிந்துரைகளோடு, வரவுசெலவுத் திட்டச் செயன்முறையிலுள்ள பிரச்சினைகளின் ஓர் பலமான பகுப்பாராய்தலை அளிப்பதையும் இலக்காகக் கொள்கின்றது.

## பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடல்

பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடல் 1980களின் பிற்பகுதிகளில் பிரேஸிலில் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து, பங்கேற்கும் வரவுசெலவுத் திட்ட எண்ணக்கருக்களும் மற்றும் பொறிமுறைகளும் இலத்தின் அமெரிக்கா மற்றும் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியதுடன், 2003 அளவில், பிரேஸில் முழுவதுமுள்ள 200க்கும் அதிகமான மாநகர சபைகள் பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டத்தை பரிசோதனை செய்து கொண்டிருந்தன. இதையொத்த சுயாதீனமான முறைமைகள், ஏனைய நாடுகளில், தென்னிந்தியாவின், கேரளா போன்றவற்றில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டம் ஆட்சிமுறைமையை மேம்படுத்துவதற்கான ஒரு பலம்மிக்க கருவியாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்தப் பொறிமுறையின் நன்கு அறியப்பட்ட சில பெறுபேறுகள் பின்வருமாறு:

- சிறந்த வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை
- குறைந்த மட்டத்திலான ஊழல்கள் மற்றும் சீர்கேடுகள்
- பொதுச் சேவை விநியோகங்களிலான முன்னேற்றம் மற்றும் இரு வழித் தொடர்பாடல்
- முன்னுரிமைகள்/மோசமான கொள்கைகள் என்பவற்றின் மறுசீராய்வு
- வளங்களின் ஒதுக்கீடுகளில் கூடுதல் சமூக நீதி/ மீள்விநியோகம்
- அதிகரித்த வினைத்திறன் மற்றும் கூடுதல் விவேகமான நிர்வாகம்

பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடுதல் என்பது பொதுநிதி மற்றும் வளங்கள் என்பவற்றின் விநியோகம் தொடர்பாக பிரஜைகள் திட்டநோக்குடனும் மற்றும் பேச்சுவார்த்தை மூலமாகவும் தீர்மானம் மேற்கொள்ளும் ஓர் செயன்முறையாகும். அத்தோடு அது, உள்ளூராட்சி வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையிலான பொது முன்னுரிமையை வடிவமைப்பதில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அரச அதிகாரிகள், சேவை வழங்குனர்கள், அரசு அல்லாத செயற்பாட்டாளர்கள் - சிவில் சமூகம், தனியார் துறை அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் வரிசெலுத்துவோரின் ஆகியோர் சம்பந்தப்படுகின்ற ஒரு பொறிமுறையுமாகும். ஆகையால், பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடுதல் தேர்ந்தெடுக்கப்பட்ட, உள்ளூர் அரசியல்கள் மற்றும் அவர்களது பிரஜைகள் ஆகியோருக்கிடையில் புதிய தொடர்புகளை ஸ்தாபிப்பதற்கு உதவுகின்றது. அத்தோடு அது, பிறவினை சார்ந்ததும் மற்றும் விருப்புசார் நிலை என்பவற்றை

முடிவுறுத்துவதற்கு வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவுகின்றதுடன் மற்றும் வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளில் தொடர்ச்சியான மக்கள் பங்களிப்பை ஊக்குவிக்கிறது. இறுதியாக, அது அரசாங்கம் மற்றும் அரசியல்வாதிகளின் வினைத்திறனின்மை, சீர்கேடுகள் மற்றும் ஊழல்கள் என்பவற்றைக் குறைப்பதற்கான ஆற்றல் கொண்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை என்பவற்றை முன்னேற்றுவதில் ஓர் பாத்திரத்தையும் வகிக்கின்றது.

பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டமிடுதல் வேறுபட்ட மாதிரிகள் மற்றும் தாக்கங்களைக் கொண்டிருந்த போதிலும் கூட, பிரஜைகள்/ வரிசெலுத்துவோருக்கு நன்மைகளை அளிப்பதாகக் கருதப்படுகின்ற மூன்று பிரதான வழிகள் உள்ளது.

- அது ஜனநாயகச் செயன்முறைகளை மேம்படுத்துகின்றது, பங்கேற்றலை பரந்துபட வைக்கிறது, உள்ளூராட்சி அதிகாரசபைகள், உள்ளூராட்சியாளர்கள் மற்றும் சிவில் சமூகம் என்பவற்றின் வகிபாகங்களை மீளெழுச்சிப்படுத்தி அரச நிறுவனங்கள் மீது நம்பிக்கையை அதிகரிக்கின்றது.

- பணம் முதலீடு செய்யப்படும் விதம், சேவை வழங்குதல்கள் எவ்வாறு மேற்பார்வை செய்யப்படுகின்றது என்பவற்றை மேம்படுத்துதல் மூலமாகவும் மற்றும் சேவைத் திட்டமிடுதலை மேற்கொள்ளும் போது உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அரச அமைப்புகளின் அறிவை அதிகரித்தல் மூலமாகவும் பொதுச் செலவிடுதலின் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துகின்றது.

- இறுதியாக அது, வறிய சமூகங்களுக்கு அத்தியாவசியமான சேவைகளில் முதலீடு செய்வதன் மூலம் சமூகம் மற்றும் தன்னார்வத் துறையை வலுப்படுத்துகின்றது, இதனால் உள்ளூர் ஜனநாயகச் செயன்முறைகளில் பங்கெடுக்கும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அவர்களது

அபிவிருத்தியை இயலச் செய்கிறதுடன், அது, உள்ளூர் குழுக்கள் சந்திப்பதற்கு, பேச்சுவார்த்தை செய்வதற்கு மற்றும் ஒன்றிணைந்து தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அவைகளை உருவாக்குவதன் மூலம் சமூக மூலதனங்களை கட்டியெழுப்புகின்றது.

ஆகவே, பங்கேற்கும் வரவுசெலவுத் திட்டத்தின் கருப்பொருளானது, இந்தப் பகுப்பாய்வில் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் பரிந்துரைக்கப்பட்டவாறு அதன் குறிக்கோள்கள் மற்றும் தாக்கங்கள் என்பவற்றுடன் ஒத்திணைவதால், வரவுசெலவுத் திட்டச் செயன்முறை யோசனைகளில் ஓர் பலமான தாக்கத்தைக் கொண்டுள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை முறைகளுக்கு பதில்சொல்பவராக தீர்மானம் மேற்கொள்பவர்களை நிறுத்துவதற்கான ஒரு பயனுறுதியான கருவியாக வரிசெலுத்துபவர் நோக்கப்படுவதால், இப்பகுப்பாய்வு முழுவதிலுமாக சுட்டிக்காட்டப்பட்ட பல பிரச்சினைகள் பங்கேற்கும் வரவு செலவுத் திட்டத்துடன் பிணைக்கும் வகையிலான தீர்வுகளைக் கொண்டிருக்கும்.

# உள்ளூராட்சி வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகள் மற்றும் அதன் உபகாரிகள் என்பவற்றுக்கிடையிலான ஜனநாயக இடைவெளி

## பிரதேச சபை வரவுசெலவுத் திட்ட சுழற்சிவட்டம்

இலங்கையில் பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்ட சுழற்சிவட்டம் பல பிரச்சினைகளுக்கு உட்பட்டதாக உள்ளது. தேசிய வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளில் வெளிப்படைத் தன்மை முன்னேற்றமடைந்துள்ளதாக காணப்படுகின்ற போது, பிரதேச சபை முறைமைகளில் பொறுப்புக்கூறுந்தன்மை, பங்கேற்கும்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவை இல்லாமல் உள்ளது. நிதி ஆணைக்குழு மற்றும் உயர் கணக்காய்வு நிலையம் (கணக்காய்வாளர் ஆணையாளர் திணைக்களம்) என்பன வெவ்வேறுபட்ட திணைக்களங்களுக்கிடையில் செயற்படுவதினால், அவை தேசிய வரவுசெலவுத் திட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்கான பயனுறுதியான கருவிகளாகும். எவ்வாறாயினும், அவர்களது வகிபாகம் உள்ளூர் மட்டத்தில் வரிசெலுத்துவோரின் பணத்திற்கு வழக்கொழிந்த தாக்கம் உடையவையாக உள்ளதுடன், அவற்றின் இடத்தை பிரதேச சபை உள்பட உள்ளூராட்சி அரசாங்க மட்டம் முழுவதற்குமாக இவற்றைப் போன்ற நிறுவனங்களோ அல்லது கண்காணிப்பு அமைப்புகளோ தற்போது வகிக்கவில்லை. இது மட்டுமன்றி பிரதேச சபைகளின் வருமானத்தின் பெரும் பகுதி தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு சுயாதீனமாக தோற்றுவிக்கபடுகின்றமை, உள்ளூர் வருமானம் மற்றும் செலவுகளின் பெரும் பகுதி போதுமான பரிசீலிப்பின் கீழ் ஒருபோதும் வருவதில்லை என்பதை அர்த்தப்படுத்துகின்றது, ஆகையால் தவறான முகாமைத்துவம், சீர்கேடு, ஊழல் அல்லது வினைத்திறனின்மை என்பவற்றுக்கான உயர் இடரபாயம் உள்ளது. மேலும், வரிசெலுத்துபவர் வரவுசெலவுத் திட்டச் செயன் முறைகளிலிருந்து தனிமைப்படுத்தப்படுவது, அவர்களது தேவைகளின் அடிப்படையில் பொறுப்புக்கூறுபவர்களாக தீர்மானம் மேற்கொள்பவர்களை நிறுத்துவதிலிருந்து அவர்களைத் தடைசெய்கின்றது. வேறு வார்த்தைகளில் கூறின், வரி செலுத்துவோர் மற்றும் உள்ளூர் வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளுக்கிடையில் தீவிரமான அந்நியப்படுத்துதல் இனங் காணப்படக்கூடியதாக உள்ளது. ஆதலால், பிரதேச சபை வரவுசெலவுத் திட்டச் செயன் முறைகளைச் சூழவுள்ள இந்தப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதும் மற்றும் பரிந்துரைகளைப் பகுப்பாரய்வதும் மற்றும் அத்தகைய கரிசனைகளுக்காக சாத்தியமான தீர்வுகளைத் தெரிவு செய்வதும் முக்கியமானதாகும்.


வரவுசெலவுத் திட்ட உருவாக்கம்
தவிசாளரின் செயலாளர் வரவுசெலவுத் திட்ட வரைபைத் தயார்செய்தல்
31 ஜுலை
வரவுசெலவுத் திட்ட ஒப்புதல்
சபை டிசம்பர் 15இற்கு முன்னதாக வரவுசெலவுத் திட்ட வரைபைப் பரிசீலித்து தீருத்தங்களை மேற்கொள்ளும். ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும்.
வரவுசெலவுத் திட்ட நிறைவேற்றம்
தவிசாளர் வருமானங்களைத் திரட்டி வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மீதான வரிகளைச் செலவிடுவார்
வரவுசெலவுத் திட்ட மேற்பார்வை
வரவுசெலவுத் திட்டக் கணக்குகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கணக்காய்வு முடிவுகள் திருத்தம் செய்யப்படுவது தவிசாளரைப் பொறுத்ததாக இருந்த போதிலும் அவை சபையினால் பரிசீலிக்கப்படும்
பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டம்

## வரவுசெலவுத் திட்ட உருவாக்கம்

தற்பொழுது வரவுசெலவுத் திட்ட வரைபு தவிசாளரினால், ஒவ்வொரு வருடத்தினதும் ஏப்பிரல் 15 இலிருந்து ஆகஸ்ட் 31 க்கு இடைப்பட்ட காலத்தில், பிரதேச சபைச் சட்டம் மற்றும் *1999 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சபைகள் மீதான ஆணைக்குழு விசாரணை அறிக்கை* என்பதற்கும் அமைவாக உருவாக்கப்படுகின்றது. ஆகையால், இது வரவுசெலவுத் திட்டத்தின் ஆரம்பத் திசையை தனியொருவரின் கைகளில் விடுகின்றது. அந்த அளவிற்கான உள்ளூர் அதிகாரத்தின் செறிவு வரிசெலுத்துவோரின் விருப்பங்கள் மற்றும் நலன்களுக்கு எதிராக செயற்படலாமென்பதால் இது பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் ஜனநாயகத்தை விட்டுக் கொடுத்தல் ஆகிய பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லலாம். இதனால், வரவுசெலவுத் திட்ட வரைபு உள்ளூர் பிரஜைகளின் கரிசனைகளுக்குரிய பொதுவான கொள்கைப் பரப்புகள் மீது கவனம் செலுத்துவதற்கு இலகுவாக அமையலாம். சம்பந்தமற்ற அல்லது குறைந்த முன்னுரிமை கொண்ட விடயங்களைக் கவனம் செலுத்தும் வரவுசெலவுத் திட்ட வரைபுகளுடன் வரிசெலுத்துவோரின் பயனுறுதியான முறையில் சம்பந்தப்படுவதற்கு தவறுவதால், இது ஏமாற்றங்களுக்கு இட்டுச் செல்லலாம். வரிசெலுத்துவோர் ஆரம்பக் கட்டத்தில் ஈடுபடவில்லையாயின், வரவுசெலவுத் திட்ட சுழற்சிவட்டத்தின் மேற்கொண்ட செயல் முறைகளுடன் அவர்கள் மீளவும் தொடர்புபடுத்திக் கொள்வர் என்பது மிகவும் சாத்தியமற்றது என்பதால், இது முழு வரவுசெலவுத் திட்டச் செயன்முறையையும் சிதைக்கிறது.

## ஒப்புதலுக்கு முன்னர் வரிசெலுத்துவோர் கலந்துரையாடல்

வரவுசெலவுத் திட்ட வரைபு தயார் செய்யப்பட்ட பின்னர் அது சபைக்கு சமர்ப்பிக்கப் படுவதற்கு முன்னர் வரிசெலுத்துவோருடன் ஒரு வாரத்துக்கான கலந்துரையாடல் செயன்முறை உள்ளது. சபையின் தனிப்பட்ட மதிப்பீட்டிற்கும் அப்பால் உள்ளூர்த் தேவைகளைக் கவனத்தில் கொள்ளுந் திறன் குறித்து எந்தவிதக் கருதுதலுமின்றி வரவுசெலவுத் திட்டம் மீது

வாக்களிக்கப்படுகின்றதை இது கருதுகின்றது. வரிசெலுத்துவோரின் விருப்புகளுக்கான ஒரு பொதுவான திசையைக் காண்பிப்பதற்கு உள்ளூர் தேர்தல்கள் உதவுகையில், ஒவ்வொரு வருடமும் முன் வைக்கப்படுகின்ற மாறுபட்ட வரவுசெலவுத் திட்டப் பிரேரனைகள் மீதான மக்கள் கருத்தைக் கணிப்பதற்கு, அது, தீர்மானம் மேற்கொள்வோருக்கு போதுமானதல்ல. தீர்மானங்கள் மக்கள் பரிசீலனையின் கீழ் வருவதற்குத் தவறுவதாலும் மற்றும் ஆரம்பத்திலிருந்தே பிரஜைகளின் பங்கேற்றல் ஊக்கப்படுத்தப்படாததினாலும் உள்ளூர்ப் பிரஜைகளுடனான இந்த ஈடுபாடின்மை வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதன் செயன்முறைகளில் எப்பொழுதாவது ஈடுபடுவதற்கு வரிசெலுத்துவோருக்கு குறைந்தளவான ஊக்கத்தையே தருகின்றமை, பொறுப்புக்கூறுந்தன்மை இல்லாது செய்யப் படுவதையே அர்த்தப்படுத்துகின்றது.

**ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம்**

சபையினால் வரவுசெலவுத் திட்டம் ஒப்புதலளிக்கப்பட்டதும் (டிசம்பர் 15இற்கு முன்னதாக) அது அச்சிடப்பட்டு டிசம்பர் 31 அளவில் விநியோகிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பிரதேச சபை ஒவ்வொன்றுக்குமான இறுதி வரவுசெலவுத் திட்டம் வியப்பான வகையில் அதிக நீளமானதாகவும் மற்றும் தொழில்நுட்ப ரீதியானதாகவும் உள்ளதினால் சாதாரண பொது மக்களுக்கு அணுகத்தக்கதாகவும் இல்லை. பிரதேச சபையின் தற்றுணிபுக்கு விட்டு விடுவதற்குப் பதிலாக, ஆவணத்துக்கு தொடர்ச்சியான அணுகுவழியை உறுதிசெய்வதற்கு உள்ளூராட்சி வரவுசெலவுத் திட்டங்கள் தொடர்பான அத்தகையதொரு கலாச்சாரத்துக்கு குறைவில்லாத வகையில் தகவல்களுக்கான சட்டத்திற்கு பரந்த வகையில் பிரயோகிக்கத் தக்க உரிமை இல்லையென்பது முக்கியமானதாகும். இது, வரி செலுத்துவோர் வரவுசெலவுத்திட்ட வரைபு ஆவணத்தை வாசிப்பதை அல்லது தங்களது பணம் எங்கே செலவிடப்படுகின்றது என்பதை சரிபார்ப்பதை சாத்தியமற்றதாக்கி ஊழல், துஷ்பிரயோக சலுகைகள், சார்புநிலை அல்லது வினைத்திறனின்மை என்பவற்றுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன்

இறுதியான வரவுசெலவுத் திட்டங்களை பொதுமக்களின் தீவிரமான பரிசீலனையின் கீழ் கொண்டு வருவதற்கு தவறுவதால் செலவினங்கள் தவறான கைகளில் வீழ்வதை இலகுவாக்குகின்றது. உதாரணத்துக்கு, பொது மக்கள் பரிசீலனையின்மை என்பது மிகவும் சாதகமான ஒப்பந்தக்களைத் தேடுவதற்கான அழுத்தத்தின் கீழ் சபை இல்லாததைக் கருதுவதால், பல ஒப்பந்தங்கள் திறமையற்ற ஒப்பந்தக்காரர்களுக்கு ஓர் வினைத்திறனற்ற அல்லது சாதகமற்ற வீதங்களில் வழங்கப்படலாம். வரவுசெலவுத் திட்ட வரைபுக் கட்டத்தில் பிரஜைகளின் ஈடுபாடின்மை என்பது இந்த இறுதி வரவுசெலவுத் திட்டம் அவர்களது கரிசனைகளை அநேகம் பிரதிபலிக்காதென்பதைக் கருதுவதால், வரவுசெலவுத் திட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் பிரஜைகளின் ஏற்கனவேயான குறைந்த பங்கேற்பு மட்டத்தோடு இதுவும் இணைந்து கொள்வதுடன், அவர்கள் ஆர்வமின்மையால் மேலும் ஏமாற்றமடைவதால் வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளிலிருந்து அவர்களை மேலும் தனிமைப்படுத்துகிறது அல்லது அந்நியப்படுத்துகின்றது.

தற்போது ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஆவணம் பிரதேச சபைக்குள்ளாகவே குறைந்தளவிலேயே விநியோகிக்கப்படுகின்றது. பிரஜைகள், அவர்கள் விரும்பினால் கூட, மக்கள் பரிசீலனையில் பங்குபற்ற முடியாததையே கருதுகிறது. ஆனால், இறுதி வரவுசெலவுத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அவர்கள் பாரப்பதற்கு முடியாததினால், இது ஜனநாயகத்தின் ஓர் அவசியமான அம்சமாகும். பிரஜைகள், அவர்களது பிரதேசத்திற்கான வரவுசெலவுத் திட்ட திட்டங்களை விபரிக்கும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதென அவர்கள் உணருவார்களாயின், பிரதேச சபை அவர்களது கரிசனைகளை கவனத்தில் கொண்டதா எனக் காண முடியாததினால் வரவுசெலவுத் திட்டச் செயன் முறைகளில் அவர்கள் பங்கேற்பதென்பது அநேகம் இயலாததொன்றேயாகும்.

## வரவுசெலவுத் திட்ட நிறைவேற்றம் மற்றும் மேற்பார்வை

தவிசாளர் வருமானங்களைத் திரட்டி வரவுசெலவுத் திட்டத்தில் பொருத்தமான ஒதுக்கீடுகளை மேற்கொள்கிறார். அனைத்து ஒதுக்கீடுகளையும் உள்ளடக்குவதற்கு வருமானம் போதுமானதாக இல்லாமல் அல்லது மறுதலையானதாக இருப்பதற்கு சாத்தியமிருந்தாலும், வரவுசெலவுத் திட்டத்தின் கணிப்பீடு முன்னைய வருடத்திலிருந்தான அனுபவத்தின் அடிப்படையிலானதாகும். போதியளவில்லாத வருமானம் எனும் சந்தர்ப்பத்தில், இறைக் கட்டுப்பாடுகள் காரணமாக பூ ர்த்தி செய்யாது எஞ்சியுள்ள நடவடிக்கைகள் உண்மையில் உள்ளூர் மக்களுக்கு உண்மையில் மிகவும் முக்கியமானதாக இருக்கலாம் என்பதால் வரிசெலுத்துவோர் எவற்றை முன்னுரிமைப்படுத்தாதிருப்பதற்கு தயாராக உள்ளனர் என்பதற்கு தற்போது குறிக்காட்டிகள் ஏதுமில்லை. தீர்மானம் மேற்கொள்ளுபவர்கள் நிதிப் பிரச்சினைகள் காரணமாக தங்களது வரவுசெலவுத் திட்ட வாக்குறுதிகளை மீறியும் மற்றும் வரிசெலுத்துவோர் உயர் முக்கியத்துவம் அளிக்கின்ற வேலைத் திட்டங்களை நிறுத்துவதாலும் இது அவர்கள் மீது மக்களை அதிருப்தி மற்றும் அவநம்பிக்கைக்கு இட்டுச் செல்லலாம். மறுபுறத்தே, உண்மையான வருமானம் கணிப்பீட்டை விட அதிகமானதாக நிரூபிக்கப்படின், அத்தகைய அதிகரித்த வருமானம் வினைத்திறனின்மை அல்லது ஊழல் என்பவற்றின் மேல் விரயம் செய்யப்படவில்லையென்பதை உறுதிசெய்வதற்கு பொறி முறையெதுவும் இல்லாதிருப்பதுடன் மீண்டுமொருமுறை அத்தகைய வருமானங்கள் எங்கே செலவு செய்யப்படல் வேண்டும், அன்றேல் மேலதிகமானவையாக சேமிக்கப்படல் வேண்டும் என வரிசெலுத்துபவர் சுட்டிக்காட்டுவதற்கும் இயலாதுள்ளது.

செயற்பாடுகள் பொறுப்பேற்கப்பட்டு செலவினங்கள் ஆரம்பித்ததும், ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட சரியான பரப்புகளுக்கு செலவிடல் பிரயோகிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு அவை போதுமான வகையில் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வரவுசெலவுத் திட்டக் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டதும்

அவை சபை மீள்பரிசீலிக்கப்படுவதுடன் கணக்காய்வில் கண்டுபிடிக்கப்பட்டவை தவிசாளரினால் திருத்தப்படுவதற்கு நடவடிக்கையைத் தேவைப்படுத்துகிறது. இது செலவினங்களை மீளாய்வதற்கும் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்டவாறு செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் வரிசெலுத்துபவர் திறனற்றவராக இருப்பதற்கு இட்டுச் செல்கிறது. மேலும், தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் பிரதானமாக தவிசாளரின் கைகளிலேயே தங்கியிருப்பதால், கணக்காய்விலிருந்து சுட்டிக்காட்டப்பட்ட ஏதேனும் முரண்பாடுகளை அவர் ஏற்றுக்கொள்ளுவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இது மிகவும் ஜனநாயகமற்ற முறையென நிரூபிப்பதுடன் கணக்காய்வுகள் செலவுகளுக்கான ஒரு பரிசீலனை வடிவமாக பயனுறுதியானவை என்பதை உறுதிப்படுத்துவதில் வரிசெலுத்துபவர் உதவியற்றவராக உணர முடியுமென்பதோடு வரவுசெலவுத் திட்ட செயன்முறைகளின் முன்னைய அனைத்து மட்டங்களிலும் வரிசெலுத்துவோரின் ஈடுபாடின்மைக்கான காரணங்களையும் வலுப்படுத்துகிறது. இறுதியாக, தேசிய மட்டத்திலானது போலன்றி வரவுசெலவுத் திட்டத்தின் நிறைவேற்றம் மற்றும் மேற்பார்வையைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பு நிறுவனங்களோ அல்லது அமைப்புகளோ இல்லையென்பது, தங்களது தீர்மானங்களுக்கான பொறுப்புக்கூறுகின்ற அச்சத்தை தீர்மானம் மேற்கொள்ளுபவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதையே கருதுகிறது. ஆகையால் ஒழுங்குபடுத்துவதிலான இந்த இடைவெளி வரிசெலுத்துபவர்களின் பணத்தின் மீதான ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கான அரசியல் இடைவெளிக்கு இடம் வைக்கலாம்.

## வரவுசெலவுத் திட்டம் தொடர்பான விடயங்கள் மீது கவனம் செலுத்துவதற்கான வழிமுறைகளும் நுட்பங்களும்

உள்ளூராட்சி அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் வெளிப்படைத்தன்மை தொடர்பான கருத்திட்டத்தின் போது ஆட்சிமுறைமை மற்றும் ஊழல் எதிர்ப்புக்கான நிகழ்ச்சித் திட்ட அணியினர் எதிர்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் பல

பரிந்துரைகள் செய்யப்பட்டன. அவை இந்த வரவுசெலவுத் திட்டச் செயன்முறையில் இனங்காணப்பட்ட சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவுதல் வேண்டும். அத்தகைய மாற்றங்கள் வரிசெலுத்துவோர் மற்றும் தீர்மானம் மேற்கொள்வோர் ஆகிய இரு தரப்புக்கும் நன்மையானவையென நிரூபிக்கப்படலாம் என்பதோடு வரிசெலுத்துபவர் வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தில் கூடுதல் நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டைக் கொண்டிருப்பதற்கு அனுமதிப்பதுடன் பதிலுக்கு உள்ளூராட்சி அரசாங்க அதிகாரசபைகள் உள்ளூர்ப் பிரஜைகளிடமிருந்து கூடுதல் நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டை அனுபவிக்கும்.

- **வரைபு நிலையில் ஆரம்பக் கலந்தாலோசனை:** வரவுசெலவுத் திட்ட வரைபு தொடர்பாக உள்ளூர் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள், வரவுசெலவுத் திட்ட செயலாற்றுபவர்கள், கரிசனை கொண்ட சமூக சேவை ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட குழுக்கள் என்பவை கலந்தாலோசிக்கப்பட முடியும். இது, அந்தப் பிரதேசத்தின் சமூக கரிசனைகள் மீது கவனம் செலுத்துவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் சரியான திசையில் வரவுசெலவுத் திட்டம் நகர்வதை உறுதிப்படுத்தும். வரவுசெலவுத் திட்டத்தின் சுழற்சி வட்டத்தின் மிக ஆரம்ப நிலையிலிருந்து பிரஜைகள் பங்குபற்றுதலுக்கான இடத்தை அளித்து, வரவுசெலவுத் திட்டத்துடனான ஆரம்பக் கட்ட ஏமாற்றங்களை இது தவிர்க்கும்.

- **முன்னுரிமை விடயங்கள் மீதான வாக்களிப்பு:** வரவுசெலவுத் திட்ட வரைபு தயாரிக்கப்பட்ட பின்னர், ஓர் பெரிய அளவில் வரிசெலுத்துவோரின் கலந்தாலோசனைக்கு வாய்ப்பொன்று உள்ளது. ஆனால் ஓர் கூடுதல் விபரமான மற்றும் ஆழமான கலந்தாலோசனைச் செயன்முறைகளுக்குப் பதிலாக இது, வரவுசெலவுத் திட்ட வரைபுக்காக சுட்டிக்காட்டப்பட்ட ஒத்த பிரதிநிதிகளுக்கான அழைப்புகளைக் கருதும்.

உதாரணத்திற்கு, எந்த வேலைத் திட்டங்களை அதிக முன்னுரிமை கொண்டதாக அவர்கள் கருதுகிறார்கள் என்பதற்கு பிரதேச சபையின் தேவைகளின் அடிப்படையிலான அத்தகைய வேலைத்திட்டங்களை திருத்தியமைப்பதற்கான வாய்ப்புடன் பிரஜைகள் வாக்களிப்பதற்கு விடப்படலாம். தற்போதுள்ள மூடிய வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தை விட, ஓர் கூடுதல் ஆரோக்கியமான உறவுநிலையை அளித்து, உள்ளூர் பிரஜைகள் மற்றும் தீர்மானம் மேற் கொள்வோருக்கிடையில் நம்பிக்கையை ஸ்தாபிப்பதற்கு இது உதவலாம். எவ்வாறாயினும், பிரஜைகளால் மேற்கொள்ளப்பட்ட உள்ளிடல்களை தீர்மானம் மேற்கொள்வோர் நேர்மையாக கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும், இல்லாவிடின் தங்களது கருத்துக்கள் ஓரங் கட்டப்படுவதாக அல்லது அலட்சியப் படுத்தப்படுவதாக பிரஜைகள் உணர்வார்களாயின் செயன்முறைகளில் ஈடுபடுவதை அவர்கள் மீண்டும் நிறுத்துவர்.

- **சமர்ப்பணத்தின் தெளிவு:** ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் அடிப்படையில், கணிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் மற்றும் எந்த வேலைத் திட்டங்கள் நிதியினைப் பெறும் என்பது போன்ற முக்கியமான தகவல்களை சுட்டிக்காட்டுகின்ற இலகுவில் விளங்கத்தக்கதான வரவுசெலவுத் திட்ட ஆவணம் ஒரு வாசகருக்கு சிநேகபூ ர்வமான வடிவில் உருவாக்கப்படின் வரிசெலுத்துவோர்களுக்கு அது கூடுதல் ஈடுபாட்டினை ஏற்படுத்துவதாக அமையும். முன்னைய யோசனைகளில் கவனம் செலுத்தப்பட்ட பங்குபற்றுதலுக்கான உந்துதலைப் பேணுவதற்கு உதவிய வண்ணம், ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் மூலமாக தெரிவிக்கப்பட்ட தங்களது கரிசனைகளை தீர்மானம் மேற்கொள்வோர்கள் பயனுற வைத்துள்ளார்களா என்பதை சரியாக புரிந்து கொண்டு அர்த்தப்படுத்திக் கொள்வதால் செயன்முறைகளில்

தங்களை ஈடுபடுத்திக்கொள்வதில் வரிசெலுத்துவோர் கூடுதல் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர்.

- **பரந்துபட்ட அணுகுந்தன்மை**: ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் விநியோகம் பிரதேச சபையின் அனைத்து வரிசெலுத்துவோரையும் சென்றடைதல் வேண்டும். தொடரறா முறை மூலமான அணுகுமுறை போதுமானதாக இல்லையெனின், வரவுசெலவுத் திட்ட ஆவணம் அச்சிடப்பட்ட வடிவில் அனைத்துப் பிரஜைகளையும் அடைவதற்கு உறுதிப்படுத்துவதை சபை முன்னுரிமைப்படுத்துதல் வேண்டும். அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படாவிடின் இறுதி வரவுசெலவுத் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை வரிசெலுத்துவோர்கள் பரிசீலிப்பதற்கு முடியாது. எனவே உள்ளூர் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு இது அத்தியாவசியம் ஆனதாகும்.

- **தகவல் சட்டத்துக்கான உரிமை மற்றும் பொறுப்புக் கூறுந்தன்மைச் சட்டத்துக்கான உரிமை** என்பன வரவுசெலவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டதும் மேற்பார்வை மற்றும் கணக்காய்வு முக்கியமானவை என்பதை நிரூபிக்கும். ஒப்புதலளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் முன்னமே திட்டமிடப்பட்ட திசையிலிருந்து விலகாதிருப்பதை வரிசெலுத்துவோர் சரிபார்ப்பதற்கு இது அனுமதிப்பதுடன் தீர்மானம் மேற்கொள்வோரை அவர்களது நடவடிக்கைகளுக்காக, குறிப்பாக தவிசாளரை பொறுப்புள்ளவர்களாக நிறுத்துவதற்கு பிரஜைகளை அனுமதிக்கும்.

- **கண்காணித்தல் நிறுவனங்களை ஸ்தாபித்தலும் செயற்படுத்துதலும்** அதே போன்று தகவல் சட்டத்துக்கான உரிமை, கண்காணிப்பு நிறுவனமொன்றின் ஸ்தாபிதம் என்பன பிரதேச சபை மட்டத்தில் வரவுசெலவு அமுல்படுத்தலின் போது வரி செலுத்துவோரது நிதி

முற்றிலும் தவறாக முகாமைத்துவம் செய்யப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கு உதவலாம். இது, வரவுசெலவுத் திட்ட செலவு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் அமுல்படுத்தலுக்கு பொறுப்புக்கூற நிறுத்துவதற்கு வரி செலுத்துவோர் மற்றும் கண்காணிப்பு நிறுவனத்தை இயலச் செய்வதைக் கருதும். அத்தகையதொரு நிறுவனம் வரவுசெலவுத் திட்டத்தின் அமுல்படுத்துதல் மற்றும் கணக்காய்வின் போது மிகவும் பயனுள்ளதாக இருக்கையில், அது வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தின் அனைத்துக் கட்டங்களிலும் தீர்மானம் மேற்கொள்வோர்கள் ஜனநாயக மற்றும் பொறுப்புக்கூறும் தராதரங்களைப் பின்பற்றுவதைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவுவதுடன் பெறுமதியான உள்ளிடுதல்களையும் கூட வழங்கும். ஒவ்வொரு நிர்வாக மட்டத்திலும் இரண்டு வழிகளிலான கண்காணித்தல் முறையை ஸ்தாபிப்பதும் மற்றும் செயற்படுத்துவதும் பொது நிர்வாகம் தொடர்பான வரிசெலுத்துவோர்களின் பலவீனமான நம்பிக்கையை மீளக் கட்டமைப்பதற்கு காத்திரமான வகையில் இட்டுச் செல்லும்.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்திலிருந்து அதிகாரங்களின் செறிவு பிரதானமாக தவிசாளருடனானதாகும். எவ்வாறாயினும், மேலும் கூடுதலான ஜனநாயக முறைமையை நிரூபிக்கும் நம்பிக்கையில், இந்த அதிகாரங்களில் சிலவற்றை சபைக்கும் மற்றும் பிரதேச சபைச் செயலாளருக்கும் பரவுவதற்கு உதவும் வகையில் சட்ட மூலமொன்று நிறைவேற்றப்படலாம். எவ்வாறாயினும், இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன் அது, வரிசெலுத்துவோர் நலன்களை உறுதிப்படுத்துவதை அரசியல் தலையீடின்றி பொதுமக்கள் பரிசீலனைக்கு திறந்ததாகவும் மற்றும் கிடைக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். அன்றேல் சட்டமாக மாற்றப்படுவதற்கு முன் அத்தகைய மாற்றங்கள் சுயாதீனமான முறையில் விமர்சிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட முடியாதவையாகலாம். இது, தவிசாளர் தற்போது

கொண்டிருக்கின்ற அதிகாரச் செறிவைச் சூழ்ந்ததான ஜனநாயக குறைபாட்டை பிரேரணைகள் உண்மையிலேயே கவனம் செலுத்துகின்றனவா என்பதைச் சரிபார்ப்பதற்கு முடியும் என்பதையும் கூட கருதுகின்றது. எவ்வாறாயினும், எதிர்வரும் காலங்களில் இந்தச் சட்டமூலம் ஓர் சட்டமாக ஸ்தாபிக்கப்படுமா அல்லது தகவல்களுக்கான உரிமைச் சட்டமூலத்தைப் போன்று, பாராளுமன்றத்தினுள் இதுவும் நிரந்தரமாக முடங்கிக் கிடக்கும் ஓர் சட்டமூலமாக இருக்குமா என்பதை நிச்சயமாக கூறுவதற்கு முடியாது. ஓர் சட்ட மூலமாக முடங்கிக் கிடப்பின், ஒருதலைப்பட்சமாக உருவாக்கப்படும் வரவுசெலவுத் திட்டங்களின் கீழ் வரிசெலுத்துவோர் தொடர்ந்தும் துன்பப்பட வேண்டுமென்பதால் அவர்களுக்கு நெருக்கமான உள்ளூராட்சி சபையான, ஜனநாயக நிறுவனம் மற்றும் வரிசெலுத்துவோருக்கிடையிலான இடை வெளியை மேலும் அதிகரிக்கின்றது.

## எதிர்காலத்துக்கான வாய்ப்புகள்

சாராம்சமாக, பிரதேச சபையின் தற்போதைய வரவுசெலவு சுழற்சி வட்டம் தொடர்பாக பல பிரச்சினைகள் உள்ளன என்பது தெளிவாகும். வரவுசெலவுத் திட்டத்தின் அனைத்துக் கட்டங்களிலும் ஓர் பொருத்தமான கண்காணித்தல் நிறுவனம் மற்றும் நியாயமான அதிகாரப் பகிர்வு என்பவற்றோடு வரிசெலுத்துவோரது பங்குபற்றுதலும் இல்லாதுள்ளது. இப்போதுள்ளவாறு இந்த முறைமை பொறுப்புக்கூற இயலாததாக இருக்கையில், வெளிப்படைத் தன்மையில்லாத நடைமுறைகள் அனைத்து விதமான ஊழல்களுக்கும் இடமளிப்பதாக உள்ளது. சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினைகள், குறிப்பாக ஜனநாயக இடைவெளியை நிரப்புவதற்காகவும் மற்றும் அவர்களது நிதி மீது தீர்மானம் மேற்கொள்ளும் கூடுதலான அதிகாரங்களை அளிப்பதற்குமாக வரவுசெலவுத் திட்டத்தினுள் பல்வேறு கட்டங்களில் வரிசெலுத்துவோரை உள்ளிணைப்பதற்காக, ஓர் குறிப்பிட்ட அளவிற்கு மிக நிச்சயமாக திருத்தியமைக்கப்படக்கூடியவையாகும். வரிசெலுத்துவோர் வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் பற்றி அதிகளவிற்கு அறிவதால் பதிலுக்கு

பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை இது அதிகரிக்கும். நம்பிக்கை வைத்தல் அல்லது மீளத் தேர்ந்தெடுத்தல் மூலமாக வரிசெலுத்துவோர் வெகுமதியளிப்பதால், இத்தகைய பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவது வரிசெலுத்துவோர், தீர்மானம் மேற்கொள்வோர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பரஸ்பர நன்மையை அளிக்கும். ஆகையால், இந்த அனைத்துக் குழுக்களும் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய மக்கள் சிநேகபூர்வமான யோசனைகள் மற்றும் பக்கச்சார்பற்ற பிரதேச அபிவிருத்தி என்பவற்றைக் கடைப்பிடிப்பதற்கு தயாரானவர்களாக இருப்பின் கணிசமான முன்னேற்றத்துக்காக நம்பிக்கை உள்ளது.

# பிரதேச சபைகளினுள் இறை ரீதியான விடயங்கள்

## பிரதேச சபை அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு முட்டுக் கட்டையிடும் தடைகள்

### வருமானத்தின் முக்கியத்துவம்

தங்களது வாக்காளர் சமூகத்துக்கான சேவைத் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு பிரதேச சபைகளுக்கான வருமானத்தை திரட்டுவது அத்தியாவசியமானதாகும். ஆகையால் உள்ளூர் விடயங்கள்/தேவைகள் என்பவை மீது கவனம் செலுத்துவதற்கு இறைரீதியான ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு உள்ளூர் வரிகள் மற்றும் தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்தான உதவித் தொகைகள் மூலமாக பிரதேச சபைகள் போதுமானளவிற்கு நிதியளிக்கப்படுதல் வேண்டும். இது மட்டுமன்றி வரிசெலுத்துவோருக்கு அவர்களே நெருங்கிய அரசாங்க மட்டமாக இருப்பதினால், உள்ளூர் சேவைகளை விநியோகிப்பதற்கு பிரதேச சபைகளே மிகவும் பயனுறுதியான நிறுவனங்களாக உள்ளன. தேசிய அரசாங்கம் அல்லது மாகாண சபைகள் இயல்பாகவே மத்திய அமைப்பானவை என்பதோடு வேறுபட்ட கிராமங்கள் மற்றும் நகரங்கள் என்பவற்றின் மாறுபட்ட தேவைப்பாடுகள் மற்றும் இந்த இடங்களிலிருந்தான அவற்றின் நிர்வாகரீதியிலான தூரங்கள் காரணமாக சமூக கரிசனைகள் மீது கவனம் செலுத்துவதற்கு பொருத்தமானவையல்ல என்பதினால் பிரதேச சபைகளின் உள்ளாற்றல் முழுமையாக பயனுறப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பிரதேச சபைகளின் சுய நிர்வாக முறையை தொடர்ச்சியாக சிதைக்கின்ற வருவாய் உருவாக்கம் தொடர்பாக தற்போது பல பிரச்சினைகள் உள்ளன என்பதோடு இது நடைபெறுவதிலிருந்து தடுப்பதற்கு அந்தப் பிரச்சினகள் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். குறிப்பாக, ஓர் மதிப்பளிக்கும் அளவிற்கு பொதுச் சேவைகளை வழங்குவதற்கு அவசியமான வருவாயை உருவாக்குவதற்கு பிரதேச சபைகள் தவறுவதால் அவை கணிசமான நிதிப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றன. இது தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்து பலவீனமான நிதிப் பாய்ச்சல் அல்லது பிரதேச சபை சேவை விநியோகங்களில் உள்ளூர் மக்களின் நம்பிக்கையின்மை காரணமாக வரிக் கொடுப்பனவுகள்

மீது அதிகரித்த மட்டங்களிலான தவறுகை காரணமானதாகும். தற்போது அவை முகங் கொடுக்கும் பிரச்சினைகள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**மேலிருந்து கீழ்நோக்கிய நிதியளித்தல் தொடர்பான கரிசனைகள்**

தற்போது பிரதேச சபையொன்று அதன் வருவாயின் 70ூ ஐ அதன் உள்ளூர் வரிகளூடாக பெற்றுக்கொள்கிறது. திரள் உதவித் தொகைகள், பொருந்தும் உதவித் தொகைகள் மற்றும் வேலைத்திட்டம் குறித்தான உதவித்தொகைகள் என்பவை மூலமாக பிரதேச சபையின் மொத்த வருமானத்தின் 30 வீதம் மட்டுமே தேசிய வரவுசெலவுத் திட்டதிலிருந்தான நிதியிலிருந்து அளிக்கப்படுவதைக் கருதுகிறது. உள்ளூர் சேவைகளுக்கு போதுமான நிதியை அளிப்பதற்கான அதன் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தேசிய வரவுசெலவுத் திட்டம் தவறுகையில், இது, பிரதேச சபை அதன் வரவுசெலவுத் திட்டத்திற்கான வருமானத்தின (நிதியை) பெரும்பகுதியை உண்டாக்குவதற்கான அழுத்தத்தை பிரதேச சபை மீது இடுகிறது. ஆனால், உண்மையில் தேசிய வரவுசெலவுத் திட்டம் பிரதேச சபையின் வருமானத்தின் சுமார் 60 வீதத்தை ஐ வழங்குதல் வேண்டுமென ஒழுங்குவிதிகள் இனங் கண்டுள்ள போதிலும், தேசிய வரவுசெலவுத் திட்டம் பதிலுக்கு உள்ளூர் பிரஜைகளுக்கு குறைந்த நன்மைகளை அளிக்கும் திட்டங்கள் மீது செலவிடுகிறது.

பிரதேச சபைக்கான நிதி ஓர் விரிவான ஒதுக்கீட்டுச் செயன்முறையூடாகச் செல்கிறது. உள்ளூராட்சி அரசாங்கத்துக்கான நிதி முதலில் அமைச்சரவையினால் சட்டபூர்வமானதாக ஆக்கப்பட்டு திறைசேரிக்கு அளிக்கப்படுகிறது. திறைசேரி பின்னர் அத்தகைய நிதிகளை சம்பந்தப்பட்ட அமைச்சு வரிசைகளுக்கு (உள்ளூராட்சி அரசாங்கம் மற்றும் மாகாண சபைகள்) விநியோகிக்கும். இது இறுதியாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படும், மாகாண சபைகள் பின்னர் வழங்கப்பட்ட வருவாயை 337 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு பகிர்ந்தளிக்கும் என்பதோடு, இவற்றுள் 271 பிரதேச சபைகளாகும் (உள்ளூராட்சி அரசாங்க சபைகளின் நிதிச்

செயற்பாடு, 2008). இந்தக் கட்டத்தில் மாகாண சபை ஓர் அவசியமற்ற இடைத்தரகராக செயற்படுகின்றதுடன், இந்த நிலைமை மாகாண மட்டத்தில் ஊழல் மற்றும் மிதமிஞ்சிய செலவுகள் காரணமாக முகாமைத்துவச் சீர்கேட்டுக்கும் இட்டுச் செல்லலாம். மாகாண சபைகளிலிருந்து நியாயமாகவும் மற்றும் வினைத்திறனான வகையிலும் வருவாய்கள் பகிரப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு வலுவான கணக்காய்வு நிறுவனங்கள் இல்லையென்ற உண்மையினாலேயே இவை அனைத்தையும் இது அநேகம் ஏற்படுத்துகின்றது.

உள்ளூராட்சி அரசாங்க வள ஒதுக்கீடுகளும் கூட, அவை மாகாண சபைகளை ஏற்கனவே சென்றடைந்தாலும் திறைசேரியிலிருந்தான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்ற ஆபத்தைக் கொண்டுள்ளன. தேசிய மட்டத்திலான புதிய வேலைத்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னுரிமைப்படுத்தல்களோடு, அத்தகைய முன்னெடுப்புகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக மாகாண சபைகளிலிருந்து வருவாயை திறைசேரி பெற்றுக்கொள்ளும். இந்த முன்னெடுப்புகள் வரிசெலுத்துவோருக்கு அரிதாகவே நன்மையளிப்பதாக உள்ளதுடன், அத்தகையதான பெற்றுக்கொள்ளுதல் உள்ளூர்ப் பிரஜைகளின் நிதியளித்தலுக்கான ஒரு நேரடி இழப்பையே காண்பிக்கின்றது. உதாரணத்துக்கு, 2009 இல் அரசாங்கம் பல புதிய அமைச்சுக்களை உருவாக்கியது, இதற்காக மாகாண சபைகளிலிருந்து (ஒப்பீட்டளவில் அவை வினைத்திறன்றவையாக ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட மாகாண சபைகள்) திரட்டப்பட்ட நிதி[1] இறுதியாக வரிசெலுத்துவோர் இழக்கின்ற நிதியையே கருதுகின்றது. முகாமைத்துவச் சீர்கேட்டிலிருந்து தங்களது நிதிகள் ஒரு போதும் பாதுகாப்பாக இல்லையென அவர்கள் உணருவதால், இது பிரஜைகளை மேலும் ஏமாற்றத்துக்குள்ளாக்குகின்றது. வெவ்வேறு வேலைத்திட்டங்களுக்குச் சாதகமாக திறைசேரி நிதிகளை எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்குமா என்பது ஒரு போதும் தெரியாததினால், பிரதேச சபைகளுக்கான வருவாய் கணிப்பீட்டையும் கேள்விகளுக்கு உள்ளாக்குகின்றது.

1 உசாத்துணைக் குறிப்பு

பிரதேச சபைகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் செயல்முறை



## பிரதேச சபைகளுக்கான ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி வழங்கள்

வரி திரட்டப்பட்டு மற்றும் பொருத்தமான வகையில் செலவிடப்படுவதை உறுதிப்படுத்துவது சாரந்ததாக அறிவு மற்றும் திறன்களின் அடிப்படையில் தற்போது பிரதேச சபைகளுக்கு குறைந்தளவான உதவிகளே உள்ளது. மேற்பார்வையாளர்கள் எவருமிடப்படவில்லை, அத்தகைய நடைமுறைகளுக்கான வழிகாட்டல்கள் இருக்கின்ற போதிலும் அவை மிகவும் தெளிவற்றதாக உள்ளது. அத்தோடு, வழிகாட்டல்களாக அவை சட்ட பிணைப்பைக் கொண்டிராததினால், பொதுமக்கள் வருவாய் உருவாக்கம் மற்றும் செலவு என்பதன் அடிப்படையில் அவை வலியுறுத்துவதற்கு இயலாதவை என்பதோடு பிரதேச சபைகளின் நாளாந்த செயற்படுதல்கள் மீது அதிக தாக்கங்களைக் கொண்டிருக்கவில்லை. நிதிகள் எவ்வாறு ஒழுங்கு முறைப்படுத்தப்படலாம் மற்றும் மிகவும் பயனுள்ள விதத்தில் செலவிடப் படலாம் என்பதில் தீர்மானம் மேற்கொள்வோர் பரிச்சயம் இல்லாததினால், இந்த பயிற்சியும் திறனின்மையும் வரி செலுத்துவோரின் வருமானம் மீது கடுமையான முகாமைத்துவ சீர்கேட்டிற்கு இட்டுச் செல்ல முடியும்.

## சீர்திருத்தங்களை முன்னேற்றுதல்

விரயம் மற்றும் ஊழல்களை குறைக்கும் அதே வேளை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதலை அதிகரிப்பதில் உதவக்கூடிய வருவாயை உருவாக்கும் தற்போதைய முறைமைக்கு பல மாற்றங்களை மேலே சுட்டிக்காட்டிய கரிசனைகளிலிருந்து எங்களால் ஆலோசனையளிக்க முடியும். பொது வருவாயைப் பெறுதல் மற்றும் முகாமைத்துவம் செய்கின்ற செயன்முறை ஓர் பொறுப்புக்கூறுகின்ற மற்றும் பயனுறுதியான முறைமையாக வருவதற்கு இந்த சீர்திருத்தங்கள் அத்தியாவசியமானவையாகும்.

- பிரதேச சபையின் வருவாயின் ஓர் மிகக் கூடிய விகிதாசாரத்துக்கு தேசிய வரவுசெலவுத் திட்டம் நிதியளித்தல் வேண்டும். 30% இல் அது பிரதேச சபை

அதன் சொந்த வருவாயை உருவாக்குவதற்கு அளவிற்கு அதிகமான சுமையை இடுகின்றது. அவ்விதம் செய்வதற்கான செயற்றினை தேசிய வரவுசெலவுத் திட்டம் கொண்டுள்ளது.'. ஆனால் தற்போது அத்தகைய ஆற்றல் கொண்ட நிதிகள் வெறுமனே வேறு தேவைகளுக்காக விநியோகிக்கப்படுவதே பிரச்சினையாகும். முன்னர் குறிப்பிட்ட ஒழுங்குமுறையோடு உடன்படும் வகையில், ஓர் பிரதேச சபை அதன் வருவாயின் 60% ஐ தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்து பெறுதல் வேண்டும். இது பிரதேச சபை மீதான அழுத்தத்தைக் குறைக்கும், ஆகையால் உள்ளூர் பிரஜைகளுடன் விருப்பத்தைப் பெறும். அத்தோடு இது, கட்டமைத்தல் போன்ற ஒரு வேலையை பிரதேச சபை மேற்கொள்வதிலிருந்து தடுப்பதற்கு உதவுவதுடன், பதிலுக்கு வருவாய் உருவாக்கத்திற்கு மாறாக சமூக மற்றும் பொது ஏற்பாடுகளில் கவனம் செலுத்துவதற்கு அனுமதிக்கும்.

- தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்தான நிதிகள் பிரதேச சபை கணக்குகளிற்கு நேரடியாக மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். பிரதேச சபை வரவுசெலவுத் திட்டத்தை விட தேசிய வரவுசெலவுத் திட்டம் விரிவான கணக்காய்வின் கீழ் வருவதால் இந்த செயல்முறை பிரதேச சபை மட்டத்தில் விரயம், துஷ்பிரயோகங்கள், சீர்கேடுகள், ஊழல் மற்றும் வினைத்திறனின்மை என்பவற்றைத் தடைசெய்து / ஓர் இடைத் தரகரிற்கான தேவையை நீக்கி, ஒவ்வொரு பிரதேச சபையும் அதன் முழுமையான ஒதுக்கப்பட்ட தொகையை பெற்றுக்கொள்வதை கூடுதல் சாத்தியமானதாக்குகின்றது.

- வருவாய்கள் பிரதேச சபைக்கு நேரடியாகச் செல்வதாயின், அது தவிசாளருக்கு இலகுவான அணுகுவழிகளைக் கொண்ட கணக்குத் திணைக்களத்தை விட கூடுதல் கட்டுப்பாடுகள் கொண்ட ஒரு நிர்வாகத் திணைக்களத்திற்கு செல்வது முக்கியமானதாகும். இது தவிசாளர் சார்பான சுய நலன்களுக்காக பொதுப் பணத்தின் துஷ்பிரயோகங்களைத் தடைசெய்ய உதவுவதற்கு முடியும்.

பிரதேச சபைகளை கவனம் செலுத்துகின்ற தற்போதைய சட்டமூலம் சபைகள் முழுவதற்குமாக கூடுதல் சமனான வகையில் அதிகாரத்தை பகிர்வதற்கு உதவும், எவ்வாறாயினும் சட்டமூலம் சட்டமாக வருமாயின், அது வருவாய்களின் பகிர்வு ஓர் நிர்வாக கணக்கினுள் வருவதை உறுதிசெய்து, வருவாயின் பகிர்வின் குறித்த பிரச்சினையை உண்மையில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

- பிரதேச சபையினுள் வரி வருமான உருவாக்கத்தைக் கண்காணிப்பதற்கு பணி நிறைவேற்ற மதிப்பீட்டு அமைப்பு ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும், இதனால் உள்ளூர் பிரஜைகள் வரி மூலமான வருவாய் உருவாக்கம் நியாயமானது மற்றும் சரியாகவும் செலவிடப்படுகிறதென உறுதியளிக்கப்பட முடியும். துற்போது அத்தகைய அமைப்பு இருக்கவில்லை, மேலும் தவிசாளர் மட்டத்திலான அதிகாரச் செறிவுடன் நோக்குகையில் பொதுக் கணக்குகள் செலவுகளுடன் முரண்படாதிருப்பதை உறுதிப் படுத்துவதற்கும் மற்றும் வரிசெலுத்துவோர் சேவை வழங்குதல்கள் மூலமாக பணத்திற்கான பெறுமதி வடிவில் வருவாய்க்கான மீள்திரும்பலைக் கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு கணக்காய்வு அமைப்பைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும். தகவல் உரிமைக்கான ஒரு சட்டமும் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும் இதன் மூலம் வரிசெலுத்துவோர் மற்றும் கணக்காய்வு அமைப்பு ஆகிய இரண்டும் வருவாய் கணக்குகளை அணுகுவதற்கான வழிவகைகளைக் கொண்டிருக்கும்.

- உள்ளூராட்சி அரசாங்க அமைச்சர் தங்களது திணைக் களங்களின் நிதியளித்தல் தொடர்பாக, குறிப்பாக ஊழல் மற்றும் வினைத்திறனின்மை குறித்து கரிசனைகளை ஊக்கத்துடன் எழுப்புதல் வேண்டும். ஒரு உத்வேகத்தைக் கொண்டிருப்பதற்கு ஏனைய அமைச்சர்களின் ஆதரவுடன், இது பாராளுமன்ற மட்டத்தில் நிகழுதல் வேண்டும். உள்ளூர் பிரஜைகளிடமிருந்து ஊழல் தொடர்பான கரிசனைகளை

அமைச்சர் வெற்றிகரமாக சமாளிப்பாராயின், பதிலுக்கு வரிசெலுத்துவோரிடமிருந்து அவர்களுக்கு கூடுதலான பற்றுறுதி மற்றும் நம்பிக்கையும் வழங்கப்பட்டு, நிதியளிக்கப்படும் செயன்முறையில் தற்போதுள்ள முழுமையான ஏமாற்ற உணர்வைக் குறைக்கின்றது. எவ்வாறாயினும், இது வெறுமனே சொல்வதை விட அதிகமானதென்பதுடன், வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றின் மீதான போதனை மீது அமைச்சர் செயற்படுதலும் வேண்டும். மேலும், பொதுமக்கள் விழிப்புணர்வைத் திரட்டுவதன் ஊடாக, ஊழலைக் குறைப்பதற்கும் மற்றும் பிரதேச சபைகளுக்கான அதிகரித்த நிதியளித்தலுக்குமாக அத்தகைய ஏதேனும் அமைப்புகளிற்குமான ஆதரவில் சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

- பிரதேச சபைகளிலிருந்து கூடுதலான சேவை அளித்தல் மூலமாக வரி கட்டமைப்பின் தற்போதைய மட்டம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். கூடுதலான கணக்காய்வு மற்றும் தேசிய வரவு - செலவுத் திட்டத்திலிருந்து அதிகளவான வருவாய் வரவு ஆகிய மேலேயுள்ள யோசனைகளுடன், பிரதேச சபைகள் வரிகளை கூடுதல் நம்பிக்கையான வகையில் பெறக்கூடியதாக இருக்கும். ஏனெனில் பிரதேச சபைகள் தேசிய வரவு - செலவுத் திட்டத்திலிருந்து கூடுதலான நிதியைப் பெறுவதால் அது பொதுமக்களின் சேவைகள் மீது செலவிடுவதற்கு கூடுதலான வருவாயைக் கொண்டிருக்கும், இது பதிலுக்கு உள்ளூர் பிரஜைகளின் நம்பிக்கையை ஈட்டுகின்றதினால், தங்களது வரிகளை கொடுப்பனவு செய்வதற்கு அவர்களை விருப்புற வைக்கின்றது. ஆகையால் இது, பொதுச் சேவைகள் என்ற வடிவில் வரிசெலுத்துபவர் மற்றும் அதிகரித்த வருமானம் என்பதன் அடிப்படையில் பிரதேச சபை ஆகிய இரு தரப்புகளுக்கும் நன்மையளிக்கின்றது.

- உள்ளூர் வருவாய் தொடர்பான தீர்மானங்களில் வரிசெலுத்துவோரும் உள்ளடக்கப் படுதல் வேண்டும், அதன் மூலம் எவை மற்றும் என்ன மட்டங்களில் வரி விதிக்கப்படுகின்றன என்பதைத் தீர்மானிப்பதில் அவர்களும் பங்களிப்பதற்கு முடியும். முதலில் வரிகளை அந்த வீதத்தில் கொடுப்பனவு செய்வதற்கு அவர்கள் தீர்மானித்ததினால், இந்த செயன்முறையில் உள்ளூர் பிரஜைகள் பங்குபற்ற இயலுமாகவிருப்பது அவர்களது வரிகளைக் கொடுப்பனவு செய்வதற்கு அவர்களை மேலும் விருப்பப்பட வைக்கும். ஆவர்களது உள்ளூர் பிரதேச சபை மற்றும் அதன் தீர்மானங்களுடன் ஈடுபடுவதற்கான கூடுதல் ஊக்கத்தை அளித்து, வருவாய் செயல்முறையில் வரிசெலுத்துபவருக்கு ஒரு உரிமையுணர்வையும் அளிக்கின்றது.

- தங்களது தொழிலில் எவ்விதம் செய்முறைப்படுத்துவது என்பதன் சரியான முறைமைகளுடன் தற்போது அநேகமானவர்கள் பரிச்சயமில்லாதிருப்பதனால் / தீர்மானம் மேற்கொள்ளுபவர்கள், செயற்பாட்டாளர்கள், வரவுசெலவுத் திட்டப் பகுப்பாய்வாளர்கள், சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் பிரதேச சபை தொடர்பாக பணியாற்றும் உள்ளூர்ப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு உதவுவதற்கு உதவிப் பொறிமுறைகள் இடப்படுதல் வேண்டும். இது மேற்பார்வையாளர்கள் அல்லது கூடுதல் உறுதியான வழிகாட்டல்கள் (தீர்மானம் மேற்கொள்பவர்கள் மீது சில விதமான சட்டப் பிணைப்பைக் கொண்டுள்ளதாக இருப்பது விரும்பத்தக்கது) வடிவில் வரலாம். அத்தகைய பயிற்சி செலவினங்களை இந்தக் குழக்கள் கூடுதல் பயனுறுதியான முறையில் ஒழுங்கமைப்பதற்கு உதவும் என்பதுடன், வருவாய் உருவாக்கம் நியாயமும் வினைத்திறனானதும் என்பதை உறுதிப்படுத்தும். இத்தகைய பயிற்சிகளோடு உப விதிகளும் அத்தியாவசியமானவையாகும், இவை பிரதேச சபையின் வருவாய் மீது பயனுறுதியான வகையில் கூடுதல் தன்னதிகாரத்தைக் கொடுக்கும்: அச்சம் அல்லது கண்டனமும் இன்றி நிதியை உருவாக்கும் அதன் தனிப்பட்ட

வழிமுறையை அவை சட்டபூர்வமாகவும் முறையான வகையிலும் தீர்மானிப்பதற்கு இயலுமானதாக இருக்கும்.

**வருவாய் உருவாக்கத்தின் எதிர்காலம்**

உள்ளூர் பிரஜைகளின் செலவில் பிரதேச சபைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறுதல் மற்றும் வினைத்திறன் உட்பட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வருவாய் உருவாக்கம் தொடர்பாக மட்டுப்படுத்துகின்ற வெளிப்படையான பிரச்சினைகள் தற்போது உள்ளன. பிரதேச சபைகளுக்கான தேசிய நிதியளித்தல் போதுமானதற்றதாக உள்ளதோடு, உள்ளூர் தீர்மானம் மேற்கொள்வோருக்கு அத்தகைய வருவாய்களை மாற்றும் செயன் முறைகள் மாகாண சபைகளூடாக நடைபெறுவதினால், அது பணித்துறை நடைமுறை சார்ந்ததாகவும் மற்றும் வீண் விரயம் கொண்டதாகவும் உள்ளது. மேலும், பிரதேச சபைகளை பீடித்திருப்பதாக காணப்படும் வியாபார நடைமுறைக் கலாசாரம் வரி செலுத்துபவர்கள் தங்களது உள்ளூர் சேவை வழங்குனர்கள் மேல் நம்பிக்கை கொள்வதற்கு தவறியதையே அர்த்தப்படுத்துகின்றது என்பதுடன், அதனால் உள்ளூர் வரி வரவுகள் நம்பிக்கையீனம் மற்றும் ஏமாற்றம் என்பவற்றின் விளைவாக தொடர்ந்தும் குறைந்தளவிலேயே உள்ளது. அத்தகைய பொது நிதிகளின் துஷ்பிரயோகப் பாவனைகளைத் தடைசெய்வதற்கு கணக்காய்வு முறை இல்லாத நிலையோடு, வருவாய்களை ஒழுங்குமறைப்படுத்தவும் மற்றும் வரி செலுத்துவோருக்கு அது உச்ச பட்ச நன்மைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கும் உள்ளூர் மட்டத்தில் ஓர் தெளிவான ஒருங்கிணைக்கும் திறன்கள் இல்லாதுள்ளது. பிரஜைகள் தங்களது தீர்மானம் மேற்கொள்வோர் மீது நம்பிக்கை கொள்வதையும் மற்றும் முழுமையான வரியீட்டுதல்களுடன் அவர்களை வெகுமதிப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச சபைகள் மீது கூடுதல் கணக்காய்வோடு, தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்து கூடுதலானதும் மற்றும் நேரடியான நிதியளித்தலை பிரதேச சபைக்கு அளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் உதவலாம். கூடுதலான பயிற்சி மற்றும் ஒவ்வொரு பிரதேச சபையினுள்ளும்

ஓர் மேலும் சமனான அதிகாரப் பகிர்வுடனும் சபை வருவாய்களை கூடுதல் பயனுறுதியான வகையில் நிர்வகிக்க முடியும். அத்தகைய மாற்றங்கள் வரிசெலுத்துவோர் மற்றும் பிரதேச சபையின் முன்னேற்றம் ஆகிய இரண்டுக்கும் நன்மை வழங்கி, உள்ளூர் மட்டத்தில் ஓர் கூடுதல் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறுகின்ற வருவாய் முறைமையைத் தோற்றுவிக்க முடியும்.

# உள்ளூர் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம்

## உள்ளூர் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் எதற்காக?

தற்போது வரவுசெலவுத் திட்டமானது நிதிகளின் ஒதுக்கீட்டை விபரிக்கின்ற மிகவும் தொழில்நுட்ப ரீதியானதாகவும் மற்றும் நீண்டதொரு ஆவணமாகவும் காணப்படுகின்றது. இதன் அநேகமான பகுதிகள் அதன் சிக்கலான தன்மை காரணமாக சராசரி வரிசெலுத்துவோருக்கு அணுகப்பட முடியாத நிலையிலுள்ளது. உள்ளூர் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டமானது இந்த வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு வடிவமாக, வாசகருக்கு கூடுதல் எளிமையும் இணக்கமும் கொண்டதாக, மற்றும் குறிப்பாக தொழில்நுட்ப ரீதியானதாக இல்லாததாகவும் இருக்கும். இந்த ஆவணம், இலகு மொழியிலும் மற்றும் தெளிவான நடையிலுமாக, வரிசெலுத்துவோரது அடிப்படை மற்றும் பிரதான தேவைகள், மற்றும் இந்த விடயங்களை உள்ளூர் அல்லது பிரதேச சபை வரவுசெலவுத் திட்டம் எவ்வாறு கவனம் செலுத்தியுள்ளது, முடிவுசெய்யப்பட்ட பொறுப்பொதுக்கங்கள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றை விபரிக்கும். வரவுசெலவுத் திட்டத்தின் முழுமையான ஆவணம் உள்ளூர் பிரஜைகளுக்கு அவசியமற்றதாகும் என்பதோடு அவர்களைச் சரியான முறையில் சம்பந்தப்படுத்துவதற்கு தவறுகின்றது, இதனாலேயே பிரஜைகள் வரவுசெலவுத் திட்டம் இந்தப் பிரச்சினையை திருத்தியமைக்கின்றது. இது தேசிய வரவுசெலவுத் திட்டத்துக்கும் கூட பிரயோகிக்கப்பட கூடியதென்பதுடன், இதனால் இலங்கையின் அனைத்து வரிசெலுத்துவோர்ரும் வருவாய் மற்றும் செலவினம் தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பேரின மட்டத் தீர்மானங்களைக் காண்பதற்கு இயலுமாக இருக்கும்.

உதாரணத்துக்கு, உள்ளூர் கடைகளில் விலைகளைப் பாதிக்கும் வரிகளிலான மாற்றங்கள் அல்லது மோட்டார் வாகனமொன்றை பெறுவதில் சாரதிகளுக்கான அதிகரித்த செலவுகள் போன்ற வெவ்வேறு உற்பத்திகள் அல்லது சேவைகளுக்காக பிரஜைகள் மீதான தனிப்பட்ட நிதித் தாக்கங்களுடன் திரட்டப்பட்ட மற்றும் செலவு செய்யப்பட்ட நிதி என்பவற்றை பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் உள்ளடக்கும்.

குறிப்பாக இந்தவொரு விடயம் உள்ளூர் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அரசாங்க உறுப்பினர்கள் ஆகியோரால் மறக்கப்பட்ட பகுதியாக உள்ளதுடன், இந்த வகையான தகவல் வரவுசெலவுத் திட்டச் செயல்முறையுடன் வரிசெலுத்தவோர் ஈடுபடுவதற்கு முக்கியமானதொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது.

பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டத்தை உருவாக்குவது ஏன் அத்தியாவசியமானது என்பதற்கு பல காரணங்கள் உள்ளது.

### வரிசெலுத்துவோர் மீது அரசாங்கத்தின் தங்கியிருத்தல்

முதலாவதாக, அரசாங்க வருவாயின் பெரும் பகுதி பிரஜைகளினால் செலுத்தப்படும் வரிகளிலிருந்து வருகின்றது. ஆகையால், வரிசெலுத்துவோர் வரவுசெலவுத் திட்டச் செயல் முறையில் ஈடுபடாமல் மற்றும் ஏமாற்றமடைபவர்களாக வருவார்களாயின், அவர்களது வரிக்கொடுப்பனவுகளை அவர்கள் செலுத்துவதற்கு தவறலாம். ஆகையால், உள்ளூர் பிரஜைகள் ஆர்வங் கொண்டவர்களாகவும் மற்றும் வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக தொடர்ந்திருப்பதை உறுதிப்படுத்துவது, உருவாக்கத்திலிருந்து இறுதி நிறைவேற்றம் வரை அவர்களுடன் முறைப்படி ஒத்துழைப்பது என்பன அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவே பிரஜைகள் வரவுசெலவுத் திட்டம் இந்த குறிக்கோள்களை அடைவதற்கு உதவுகிறது.

### பிரஜைகளின் உரிமைகள்

பிரஜைகளும் வரவுசெலவுத் திட்டம் பற்றி அறிந்து கொள்வதற்கான ஒரு அடிப்படை உரிமையைக் கொண்டுள்ளனர். தற்போதைய வரவுசெலவுத் திட்ட ஆவணங்களின் தொழிலநுட்ப ரீதியான தன்மை காரணமாக, அதனைப் விளங்கிக் கொள்வதில் அவர்கள் கஷ்டப்படுவதினால் நிதிரீதியான தீர்மானங்களை அறிந்து கொள்வதிலிருந்து பல உள்ளூர் பிரஜைகளை அது தடை செய்கின்றது, எனவே இதனால் உள்ளூர் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் அத்தகைய விடயங்கள் மீதான அவர்களது உரிமையை

மீள் ஸ்தாபிப்பதன் மூலம் இக்கரிசனை மீது கவனம் செலுத்துகின்றது.

## வெளிப்படைத்தன்மை மற்றும் கண்காணித்தல்

காலம் செல்ல சில நடவடிக்கைகள் அல்லது சமூக விடயங்கள் மீதான செலவுகளில் மாற்றங்களை பார்ப்பதற்கு இயலுமாக இருப்பதினால், பிரஜைகளின் ஒரு வரவுசெலவுத் திட்டத்திற்கான அணுகுதலுடன் வரவுசெலவுத் திட்டத் தீர்மானங்களை கூடுதல் சிறந்த முறையில் பிரஜைகளும் கூட கண்காணிக்க முடியுமென்பதோடு வருவாய்கள் துஷ்பிரயோகங் களுக்கு உட்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு அதனை சரிபார்ப்பதற்கு முடியும். தீர்மானம் மேற்கொள்ளுபவர்களுடன் மேலும் கூடுதல் கிரமமான முறையில் பிரஜைகள் கரிசனைகளை எழுப்புவதற்கு இது அனுமதித்து, உள்ளூர் நிதியளித்தலின் வழியை வடிவமைப்பதற்கும் கூட உதவுகிறது.

## எதிர்கால வரவுசெலவுத் திட்டங்களுக்காக தயார்செய்தல்

வரிசெலுத்தவோர் அடுத்த வரவுசெலவுத் திட்டத்திற்காக தயார் செய்வதற்கு பயனுறுதியானதொரு கருவியாகவும் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் செயற்படுகின்றது. இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய தகவல்களுக்கான அணுகுவழிகளுடன் வினைத் திறனின்மை மற்றும் முகாமைத்துவச் சீர்கேடு என்பவற்றுக்கு எச்சரிக்கையாக இருக்க முடியுமென்பதோடு, ஒவ்வொரு வரவுசெலவுத் திட்டத்தையும் அதற்கான காலத்தில் கண்காணிப்பதற்கும் முடியும். அர்த்தப்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் உடனடியாக விளங்கிக் கொள்வதற்கும் முடியாததுமான ஒரு காட்சிப்படத்தை வெறுமனே பார்ப்பதற்குப் பதிலாக, சில சமூகப் பிரச்சினைகள் மீது முன்னைய செலவு மட்டங்கள் என்ன என்பதை அவர்கள் பார்ப்பதற்கும் முடியுமாக இருப்பதினால் அது செலவினங்களை சூழ்நிலை சார்ந்ததாக தொடர்புபடுத்துவதற்கும் அவர்களை அனுமதிக்கின்றது.

## தீர்மானம் மேற்கொள்வதில் பிரஜைகளின் பிரேரணைகள்

பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் இருக்கின்றமை வரிசெலுத்துபவர்கள் அடுத்த வரவுசெலவுத் திட்டத்துக்கான பிரேரணைகளை திட்டமிட்டு தயார்செய்வதற்கும் அனுமதிக்கின்றது. சில நடவடிக்கைகள் அல்லது சமூக கரிசனைகள் மீது நிதியில்லாமையை அவதானிக்குமிடத்து, பிரதேச சபைக்கு அவர்கள் பிரேரணைகளை அளிப்பதற்கு இயலுமாக இருக்கும். அத்தகைய தீர்மானங்களால் பாதிக்கப்பட்ட பிரஜைகளாக அவர்களுக்கு என்ன ஏற்பாடுகள் தேவை என்பதன் அடிப்படையில் அவர்கள் மிகவும் அறிந்திருக்கும் நிலையில் இருப்பதினால் இது குறிப்பிட்ட விதத்தில் பயனுறுதியானதாக இருக்கும். அத்தகைய பிரேரணைகளை பிரதேச சபை கவனத்தில் கொள்வதற்கு தயாராயின், இது பிரச்சினைகளைச் சமாளிப்பதில் வினைத்திறனைக் கொண்டுவரும் என்பதோடு, வரிசெலுத்துவோர் மற்றும் தீர்மானம் மேற்கொள்வோரிடையே பரஸ்பர நம்பிக்கையை மீள்நிலைநாட்டவும் உதவும்.

## பொதுமக்கள் அழுத்தம்

வரிசெலுத்துவோர் தங்களது வரவுசெலவுத் திட்ட தீர்மானங்களை அணுகுவதற்கு கொண்டுள்ள அறிவு, அவர்களது தீர்மானங்கள் உள்ளூர் பிரஜைகளை திருப்தி செய்வதை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதைக் கருதுவதினால், பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மீது மக்கள் அழுத்தங்களை அதிகரிப்பதற்கு உதவலாம். வரவுசெலவுத் திட்ட விடயங்கள் மீது உள்ளூர் பிரஜைகள் தங்களது குரலை எழுப்புவதற்கு அது அவசியம் உதவுவதினால், அத்தகைய அழுத்தங்கள் ஜனநாயகத்திற்கு நல்லதாகும். அத்தகையதொரு செய்முறை பிரதேச சபை குறித்த தடத்தில் செல்வதற்கும் மற்றும் அவர்களது வாக்குறுதிகளைப் பேணுவதற்குமான ஒரு நினைவூட்டியாக செயற்படுவதுடன் அதனால் உள்ளூர் அரசியல் வாதிகளுக்கான பொறுப்புக் கூறலையும் அதிகரிக்கின்றது.

## அங்கீகரித்தலை நோக்கி

சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் ஒரு பிரஜைகள் வரவுசெலவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும், அது வரிசெலுத்துவோருக்கு மக்கள் நிதி நடவடிக்கைகளில் ஓர் மிக அதிகமான வகிபாகத்தை அளித்து, வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளூர் ஜனநாயகத்தை அதிகரிக்கும். தொழில்நுட்பத் தன்மையற்ற அத்தகைய ஒரு வரவுசெலவுத் திட்டம் எந்தவொரு பிரஜையும் அதனுடன் ஈடுபடுவதற்கு அனுமதிப்பதுடன், அதனால் தீர்மானம் மேற்கொள்வோரை மேலும் அதிக பயனுறுதியான வகையில் பொறுப்புக்கூற வைப்பவர்களாக நிறுத்துகிறது. ஆகையால், அத்தகையதொரு அணுகுமுறையின் அங்கீகரித்தலை நாம் சிரத்தையோடு ஊக்குவிக்கிறோம், அது தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளில் உள்ளூர் பிரஜைகளை மேலும் உள்ளிணைப் பதற்கு நாடும் ஏனைய முறைமைகளை முழுமையாக்கும்.

# பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்டச் செயல்முறைகளுள் உள்ளூர் பாத்தியதை கொண்டவர்களது குரல்கள்

## உள்ளூர் பாத்தியதை கொண்டவர்கள் மற்றும் அவர்களது குரல்களின் முக்கியத்துவம்

வரவுசெலவுத் திட்டச் செயல்முறையின் பல அம்சங்கள் தொடர்பாக பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளை நாம் குறித்துக் காட்டியுள்ள வேளையில், அத்தகையதொரு செயல்முறையில் ஈடுபட்டுள்ளவர்களின் கண்ணோட்டங்களும் மற்றும் கரிசனைகளும் எழுப்பப்படுவதும் மிகவும் அத்தியாவசியமானதாகும். இந்தச் செயல்முறையில் ஈடுபட்டுள்ள உறுப்பினரகளாக அவர்கள், வரவுசெலவுத் திட்டச் செயன்முறையைச் சூழவுள்ள பிரச்சினைகள் பற்றிய நேரடி அறிவைக் கொண்டிருக்கலாம் என்பதால், செயன்முறைக்கு வெளியாலிருந்து ஆய்வுகளூடாக பெரிதும் எட்டப்படாத விடயங்கள் பற்றிய ஒரு உட்பார்வையை அவர்கள் அளிப்பதற்கு முடியும். வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்திலான பிரஜைகளின் ஈடுபாடு சபை உறுப்பினர்கள் அல்லது தவிசாளரிலிருந்து, உள்ளூர் பிரதிநிதிகள் அல்லது ஊடகவியலாளர்கள் வரை வேறுபடலாம். இந்த வேறுபட்ட குழுக்களின் அனுபவங்கள் வரவுசெலவுத் திட்டச் சுழற்சி வட்டத்தினுள் வேறுபடும் என்பதோடு, பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளைக் கலந்துரையாடும் போது, ஒவ்வொருவரும் மாறுபட்ட கண்ணோட்டங்களை கவனத்தில் கொள்வதற்கு வழங்குவர். ஆகையால், வெவ்வேறு செயற்பாட்டாளர்களது கண்ணோட்டங்களை கவனத்தில் கொள்ளும் போது அவற்றை ஏனைய அனுபவங்களுடனான சூழ்நிலைகளுடன் இடுவது முக்கியமானதாகும், அதனால் நேரடியான கரிசனங்கள் குறித்த ஒரு முழுமையான தோற்றத்தை பெற்றுக்கொள்ள முடியும். தங்களது வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தின் குறிப்பிட்ட அம்சங்கள் வினைத்திறனானது அல்லது பொறுப்புக்கூறத்தக்கது என சிலர் காணலாமென்பதால், அனைத்துக் கண்ணோட்டங்களும் கவனத்தில் கொள்ளப்படுமென உண்மையில் சொல்வதற்கில்லை. மாறுபட்ட பாராட்டுதல்களும் மற்றும் கரிசனையும் எந்த முறைமைகள் பயனுறுதியானவை மற்றும் பிரதேச சபையில் ஜனநாயகத் தன்மை வாய்ந்தவை என்பதையும் மற்றும் எவை வினைத்திறனற்றவை

மற்றும் பொறுப்புக்கூற இயலாதவை என்பதை அளவுமட்டக் குறியாக கணிப்பதற்கும் உதவும்.

நாங்கள் சமர்ப்பித்த கண்ணோட்டங்கள் செயலமர்வுகள் மற்றும் அத்தகைய சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல்கள் மூலமாக திரட்டப்பட்டவையாகும். சில கருத்துரைகள் சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் பலரிடமிருந்து பெறப்பட்ட பொதுவான குறிப்புகளாக இருக்கையில் வேறு சில ஒரு கூடுதல் தனிப்பட்டவையாக அல்லது ஒரு குறிப்பிட்ட கருத்துரைக்கானவையாக இருக்கலாம். மேலும், வெவ்வேறு பிரதேச சபைகள் வெவ்வேறு அனுபவங்களைக் கொண்டிருக்கலாம், எனவே சில செயற்பாட்டாளர்களுக்கான ஒரு விடயம் அல்லது பிரச்சினை இலங்கை முழுவதிலுமான அனைத்துப் பிரதேச சபைகளையும் அவசியம் பிரதிநிதித்துவப்படுத்த தேவையில்லை.

### தவிசாளர் அதிகாரம் குறித்தான கரிசனைகள்

பிரதேச சபையிலுள்ள உறுப்பினர்கள் தவிசாளர் தற்போது கொண்டுள்ள அதிகளவிலான அதிகாரங்கள் குறித்து கரிசனைகளை வெளிப்படுத்தினர். பிரதேச சபைக் சட்டம் வரவு செலவுத் திட்ட விடயங்கள் மீது முன்னொருபோதுமில்லாத அதிகாரத்தை தவிசாளர்களுக்கு உத்தரவாதப்படுத்தியுள்ளதுடன், இவ்வதிகாரத்துடன் பணியாற்றுவது குறிப்பாக சவால் மிக்கதாக இருப்பதை உறுப்பினர்கள் கண்டுள்ளனர். தாங்கள் தவிசாளருக்கு யோசனைகளைப் பிரேரிக்கும் போது (உள்ளூர் பிரஜைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் போது அல்லது தாங்களாகவே உருவாக்குகையில்), உதாரணத்துக்கு வரவுசெலவுத் திட்டம் மீதான ஒரு பின்னூட்டல் அல்லது செலவினம் தொடர்பான புதிய கரிசனைகளை தெரிவிக்கையில், தவிசாளர் அவற்றை கவனத்திற்கு எடுக்காமலே அலட்சியப்படுத்தலாம், இதனை அவர் வழக்கமாக செய்து வருகிறார். மேலும், உள்ளூர் உறுப்பினர்கள் பிரச்சினையொன்றை எழுப்பி வரவுசெலவுத் திட்டமொன்று சபையில் தோற்கடிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு தவறின், தவிசாளர் அத்தகையதொரு தீர்மானத்தை உடனடியாகவே ஒதுக்கித் தள்ளுவதற்கு முடியும். இது சபை உறுப்பினர்களுக்கு

ஏமாற்றமளிப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது, அத்தகையதொரு விடயம் செயல்முறையை கணிசமானளவிற்கு ஜனநாயகமற்ற ரீதியிலானதாக ஆக்குகிறது என அவர்கள் உணர்கின்றனர். கல்கமுவ சபையின் [2] செயலாளரும் கூட சில சபைகளின் தவிசாளர்கள் தீர்மானங்களை ஓர் சர்வாதிகார ரீதியில் கட்டளையிடுவதாக கண்டுள்ளதுடன், சபை உறுப்பினர்கள் (குறிப்பாக எதிர்க்கட்சியிலுள்ளவர்கள்) இந்தப் பிரச்சினையின்றி (11) தங்களது கரிசனங்களை தெரிவிப்பதற்கு இயலுமாக இருத்தலின் தேவையை வலியுறுத்துகின்றார்.

**வரவுசெலவுத் திட்ட உருவாக்கத்தில் தவிசாளரை ஈடுபடுத்துதல்**

சில சபை செயலாளர்களும் மற்றும் சபை உறுப்பினர்களும் வரவுசெலவுத் திட்ட உருவாக்க செயல்முறையில் தவிசாளரிடமிருந்து உள்ளிடுதல்கள் இல்லாமலிருப்பது குறித்த பிரச்சினையையும் எழுப்பினர். குறிப்பாக, செயலாளர்கள் வரவுசெலவுத் திட்ட உருவாக்கத்தில் ஈடுபட்டிருக்கையில், தவிசாளர்கள் தங்களை அத்தகைய செயன்முறைகளில் ஈடுபடுத்துவதற்கு தவறியதையும் செயலாளர்கள் கண்டனர். அத்தகைய தவிசாளரிடமிருந்து வரவுசெலவுத் திட்டச் செயன்முறையில் ஓர் போதிய அறிவின்மை மற்றும் ஈடுபாடின்மைக்கும் இது இட்டுச் சென்றுள்ளது. இது அனைத்து பிரதேச சபைகளிலுமான நிலைமை என்பது அவசியமானதாக இல்லாதிருந்த போதிலும், அது ஒரு கவனத்திற்குரிய விடயமாக போதியளவிற்கு தேவைப் படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சபை உறுப்பினர்களிடமிருந்தான கரிசனை, வரவுசெலவுத் திட்டம் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களும் தவிசாளரினால் தீர்மானிக்கப்படுவதாகும். உள்ளூர் பிரஜைகளுக்கான அதன் பயன்கள் என்பதன் அடிப்படையில் வரவுசெலவுத் திட்ட உருவாக்க செயன்முறைகளை அவர்கள் கருதுவதில்லை என்பது கண்டறியப்படலாம் என்பதுடன் பதிலுக்கு வரவுசெலவுத் திட்ட ஒப்பந்தங்களிலான அத்தகைய கட்டுப்பாடுகள் துஷ் பிரயோகங்களுக்கு இட்டுச் செல்வதாக காணப்பட்டுள்ளது.

---

[1] உசாத்துணை

தவிசாளரின் அறிமுகம் அத்தகைய ஒப்பந்தங்களில் கூடுதல் கவனத்தில் கொள்ளப்பட்டு, வரிசெலுத்துவோருக்கு ஒப்பந்தங்கள் ஒரு குறைந்த விகிதத்தில் அளிக்கப்பட்டிருக்கலாம் என்பதினால், அத்தகைய நடைமுறைகள் பிரதேச சபைகளின் நிதிகளுக்கு உண்மையில் அபாயகரமானமானவையாக இருக்கலாம். உள்ளூராட்சி அரசாங்க அமைச்சின் முன்னாள் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (12) இது தொடர்பான கரிசனைகளை எழுப்பியுள்ளதுடன், பல சந்தர்ப்பங்களில் தவிசாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளின் கருத்துக்களை கவனத்திற்கு எடுக்கத் தவறி ஓர் ''தனி மனிதத் தீர்மானத்துடன்'' செயற்படுவதாக விவாதிக்கிறார், வரவுசெலவுத் திட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் இதுவே நிலைமையாக காணப்படுகின்றது.

**சபை உறுப்பினர்களின் கட்டமைப்பு**

இது வரை பிரதேச சபை தொடர்பாக ஆட்சிமுறைமை நிகழ்ச்சித் திட்டத்தினால் நடாத்தப்பட்ட 44 செயலமர்வுகளில், பிரதேச சபையின் உத்தியோகபூர்வ ஏற்பாடுகளுக்கு[3] முரணாக இருந்த போதிலும் கூட ஆளுங் கட்சி வரிசைகளுக்கமைவாகவே ஒழுங்கமைக்கப் படுவதைக் சபையின் சில உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்டறிந்தனர். கட்சி வரிசைகளுக்கு பதிலாக, சபையினுள் சிரேஷ்டநிலை வரிசை ஒழுங்கிலேயே உண்மையில் உறுப்பினர்கள் அமர்தல் வேண்டும்.

ஆகையால், தங்களது வாக்களிப்பை உண்மையில் ஒரு அளவுக்கு மாற்றுவதற்கு விரும்புகையில், அவர்களது வாக்கு, கட்சி நிலைமைக்குள் உட்படுகின்ற விடயங்கள் மீது மட்டுப்படுத்தப்பட்டதை எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் கண்டனர். சபையில் அமரும் ஏற்பாடுகள், தொடருகின்ற பிரச்சினையின் மற்றொரு பரிமாணமாகும் என்பதோடு ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் சினமேற்படுத்துவதற்கான அடிப்படையாக எப்போதும் அமைகிறது.

---

[3] பிரதேச சபை விதி 1988 - கூட்ட நடைமுறைகள்

தங்களைக் கலந்தாலோசிக்காமல் ஆளுங் கட்சியானது வரவுசெலவுத் திட்ட தீர்மானங்களை மேற்கொள்வதையும் எதிர்க கட்சி உறுப்பினர்கள் கண்டதுடன், அது அரசியல் ரீதியாக ஓர் பக்கச் சார்பான ஆவணத்திற்கு வழி வகுக்கும். உதாரணத்திற்கு, செலவுகள் எங்கே மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் போது, ஆளுங் கட்சியானது எதிர்க் கட்சி உறுப்பினர்களிடமிருந்தான உள்ளிடுதல்கள் மற்றும் யோசனைகளை அலட்சியப்படுத்தி தீர்மானங்களை கலந்தாலோசனைகளின்றி அமுல்படுத்துகின்றது. எதிர்க் கட்சி உறுப்பினர்களும் கூட வரிசெலுத்துவோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாவர், எனவே பிரதேச சபையில் அவர்களது பதவி அந்தஸ்துகளைக் கவனத்தில் கொள்ளாது வரவுசெலவுத் திட்டத் தீர்மானங்கள் குறித்து செவிமடுக்கப்படுவதற்கான ஓர் உரிமையை அவர்கள் கொண்டுள்ளனர். இதனால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் ஏமாற்றமடைந்துள்ளதோடு வரவுசெலவுத் திட்டச் செயல்முறை மற்றும் ஏனைய தொடர்புபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து பங்களிப்பதில் உதவியற்றவர்களாக உணர்கின்றனர். இதனொரு விளைவாக, சபையின் வேலைத் திட்டமானது தவிசாளர் மற்றும் ஆளுங் கட்சி உறுப்பினர்களின் ஓர் விருப்பப் பட்டியலாக மாறியுள்ளது.

**நிதி மீதான தவிசாளரின் கண்ணோட்டம்**

சில தவிசாளர்கள் நிதி ஸ்திரமின்மையை வரவுசெலவுத் திட்டம் தொடர்பான ஓர் பிரச்சினையாக சுட்டிக்காட்டுவது அவதானிக்கப்பட்டது, அது பிரதேச சபையினுள் வேலைத் திட்டங்கள் பலவற்றுக்கு நிதி வழங்குவது சிரமத்திற்குரியதென்பதை அர்த்தப்படுத்துகின்றது. கெபித்திகொலாவ பிரதேச சபையின் [4] தவிசாளர், பிரதேச சபை அதன் திறனுக்கு ஏற்ப சிறந்த வகையில் நிதி நிலைமைகளை கையாண்டதாக வாதிட்டார், ஆனால் பிரதேச சபைகள் முகங் கொடுக்கும் நிதி நெருக்கடிகள் பற்றி பிரஜைகள்

---

4 ............................................

அறிந்திருத்தல் வேண்டுமென சுட்டிக்காட்டினார். கூடுதலான நிதி ஸ்திரத்தன்மை மற்றும் பிரதேச சபைக்கான ஆதரவை அளிக்கும் எந்தவொரு வடிவிலான பொறிமுறையையும் தவிசாளர் வரவேற்றார் / அதன் கிரமமான நிதி பிரதேச சபையை வினைத்திறனான வகையிலும், மற்றும் வரி செலுத்துவோரின் தேவைகளுக்குமாக நடாத்துவதை மிகவும் இலகுவாக்கும். கல்கமுவ பிரதேச சபையின் செயலாளரும் கூட நிதி வழங்குதல் தொடர்பான பிரச்சினையை எழுப்பியதுடன், மிகவும் குறைந்தவொரு வரவுசெலவுத் திட்டத்தில் அவர்கள் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதால் உள்ளூர்ப் பிரஜைகளின் யோசனைகள் மற்றும் பிரேரணைகளுக்கு இடமளிப்பதென்பது மிகவும் சிரமத்திற்குரியதென்பதோடு, அத்தகைய ஆலோசனைகளை பொறுப்பேற்பதற்கு அங்கே நிதி முற்றிலுமாக இல்லை என்று குறிப்பிட்டார். பிரதேச சபை போன்ற பணிக் கட்டமைப்புகளில் காகிதத்தில் குறிப்பிடப்படும் இறை ரீதியான விடயங்கள் மீது ஓர் நடைமுறைரீதியான உதாரணமே இதுவாகும்.

## வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் பண்டாரவளை நகர சபையிலிருந்தான சிந்தனைகள்

முன்னர் குறிப்பிட்டவாறு அனைத்து உள்ளிடுதல்களுமே எதிர்மறையானவையாகவோ அல்லது கரிசனைக்குரிவையாகவோ இருப்பதில்லை. பண்டாரவளை நகர சபைக்குட்பட்ட உள்ளூர்ப் பிரஜைகள் அங்குள்ள ஆட்சி முறைமையுடன் திருப்தி கொள்வதாக தெரிவித்ததுடன், நகர சபை அவர்களைச் செவிமடுப்பதாகவும் கண்டனர். நகர சபை குறித்து அவர்கள் அத்தகையதொரு உணர்வைக் கொண்டிருப்பதால் அவர்கள் அதன் மேல் நம்பிக்கையை வைத்துள்னர், அது அவர்கள் வரிகளைச் செலுத்துவதற்கு கூடுதலான விருப்பங்களைக் கொண்டிருப்பதை அல்லது அவர்களால் முடிந்தளவிற்கு தீர்மானங்கள் மேற்கொள்வதில் தங்களை ஈடுபடுத்துகின்றனர் என்பதைக் கருதுகிறது. நகர சபையின் தவிசாளர் அத்தகையதொரு நிலைமையை பிரதிபலிப்பதுடன், சமூகத்தைச் செவிமடுத்து அவர்களுக்கு சேவை செய்வதற்காகவுமே நகர சபை அங்குள்ளதாக வாதிடுகிறார். உள்ளூராட்சி சபையொன்று வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் மற்றும்

பொறுப்புக்கூறத்தக்கதாகவும் இருத்தல் வேண்டுமென அவர்கள் நம்புகின்றனர் என்பதுடன், அத்தகைய இலக்குகளை தவிசாளர் பங்கேற்கும் திட்டமிடல், வரவுசெலவுத் திட்டம், கண்காணித்தல் மற்றும் அமுல்படுத்தல் என்பவை மூலமாக அடைவதற்கு எண்ணுகிறார், அது உள்ளூர் பிரஜைகளிடமிருந்து சாதகமான பதிலிறுத்தல்கள் காரணமாக சாத்தியப்படுகின்றதாகத் தெரிகின்றது. இலங்கை முழுவதிலுமான ஏனைய உள்ளூராட்சி சபைகளுடன் ஒப்பிடுகையில் இது ஒரு சாதாரணமான நிலையல்ல.

### பிரதேச சபைக் கூட்டங்களில் பொதுமக்களின் பங்கேற்பு

பிரஜைகள் குழு உறுப்பினர்கள் தாம் பிரதேச சபைக் கூட்டங்களில் பங்குகொள்வதற்கு நடைமுறையில் அதிக வாய்ப்புகளைக் கொண்டிருக்கவில்லையெனத் தெரிவித்தனர். உதாரணத்துக்கு, பதுளையில் ஊக்குவிப்பின்மை மற்றும் வசதிகளின்மை என்பவற்றை பங்கேற்காமைக்கான காரணங்களினொரு பகுதியாக குறிப்பிட்டதுடன், பிரதேச சபைக்கும் தங்களுக்குமிடையிலான உறவுநிலை மோசமாக உள்ளதையும் அவர்கள் காண்பித்தனர். மேலும், சம்பந்தப்பட்ட கூட்டங்கள் பற்றி தாம் அரிதாகவே அறியத் தரப்பட்டதாக வரிசெலுத்துவோர் தெரிவித்தனர், எனவே முக்கியமான கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்வதற்கு இயலும் வகையில் தகவல்கள் பரப்புரை செய்யப்படவில்லை. உதாரணத்துக்கு, பதுளை மாவட்டத்தின் லுணுகல பிரதேச சபைக்கு உட்பட்ட உள்ளூர் பிரஜைகள் தெரிவிக்கையில், வரிசெலுத்துவோருக்கென் சில இருக்கைகள் சபையின் கேட்போர் கூடத்தில் உள்ளபோதிலும், தாங்கள் சில கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு முடியுமா என்பது பற்றி தமக்கு தெரியாது என்று கூறினர்.

இந்த விடயங்கள் பலவற்றுக்கு சபை உறுப்பினர்கள் எதிரிடையான கருத்துக்களையே எதிரொலித்ததுடன், வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு சமுகம் அளிக்காமையினால் தீர்மானம் மேற்கொள்ளுதல்களில் வரிசெலுத்துவோரை ஈடு படுத்துவதற்கு முடியாதென அவர்கள் குறிப்பிட்டனர். ஆகவே, ஓர் தொடர்புபட்ட விடயத்தில், அவர்கள்

எதிரெதிர் கருத்துக்களை எடுப்பதால், இரு தரப்பினரிடையேயும் ஓர் மோசமான உறவுநிலையே உள்ளது என்பது தெளிவு. எவ்வாறாயினும், கெபித்திகொல்லா பிரதேச சபைத் தவிசாளர் (10), பிரஜைகளின் கருத்துக்களை செவிமடுப்பதற்கானதொரு பொறிமுறையை சபை தற்போது ஏற்படுத்தாத போதிலும், அத்தகையதொரு தொடர்பை ஸ்தாபனம் அல்லது அமைப்பொன்று ஏற்படுத்துவதற்கு தாம் மிகவும் திறந்த மனத்துடனிருப்பதாக கூறியமை, தவிசாளரின் விருப்பில், வரிசெலுத்துவோர் மற்றும் பிரதேச சபை என்பவற்றுக்கிடையில் வலுவான உறவுகளுக்கு சாத்தியமிருப்பதையே அர்த்தப்படுத்துகின்றது.

மேலும், வரிசெலுத்துவோருடன் ஈடுபடுவதற்கும் மற்றும் பிரதேச சபையின் நடாத்துதலை மேம்படுத்துவதற்குமாக தாங்கள் பல புத்தாக்க வடிவிலான முறைமைகளை நடைமுறைப் படுத்தியுள்ளதாக கல்கமுவ பிரதேச சபைச் செயலாளர் கூறினார், உதாரணத்துக்கு நூலகங்களுக்கு எத்தகைய புத்தகங்களை வாங்குவது என்பது தொடர்பில் முன்னர் உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்துக்கு, தற்போது உள்ளூர்ப் பிரஜைகளிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**உள்ளூர்ப் பிரதிநிதிகளின் கூருணர்வுத்தன்மை மற்றும் பங்கேற்றல்**

சில சந்தர்ப்பங்களில் உள்ளூர்ப் பிரதிநிதிகள் மற்றும் சபைக்குமிடையிலான உறவுநிலை ஏற்கத்தக்கதாக உள்ளது. அத்தகைதொரு உறவுநிலை நிலவும்போது, இடைச்செயற்பாடு கொண்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது கூடுதல் இலகுவானது. பிரதிநிதிகள் பிரதேச சபை மற்றும் அதன் மூலவளங்களோடு இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்த முடியும். எவ்வாறாயினும், பிரதேச சபையினுள் வரவுசெலவுத் திட்டச் செயன்முறை எவ்வாறு செயற்படுகின்றது என்பது பற்றி சில உள்ளூர்ப் பிரதிநிதிகள் அறிந்திராததும், மற்றும் சபைக்கு யோசனைகளைக் கொண்டு வருவதற்கு உள்ள பொறிமுறைகள் நிச்சயமற்றிருப்பதும் கூட கண்டறிப்பட்டது. உதாரணத்துக்கு, வட மத்திய மாகாணத்தில் விவசாயிகள் முன்னேற்ற சங்கத்துக்கான தலைவர் (8) சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக சபையுடன்

சில நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டபோது, வரவுசெலவுத் திட்டச் செயன்முறை எவ்வாறு செயற்படுகின்றது என்பது பற்றி தான் சிறிதளவான அறிவைக் கொண்டிருந்ததையே கண்டுகொண்டதாக அவர் கூறினார். அத்தோடு, பிரதேச சபைக்கும் மற்றும் அவரது விவசாயிகள் சங்கத்துக்குமிடையில் நெருங்கிய உறவைப் பேணுவதற்கு, வரவுசெலவுத் திட்டக் கவனத்திற்காக சபைக்கு கருத்துக்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கும் ஓர் பொறிமுறையும் தேவை என அவர் கூறினார்.

இந்த நிலைமையினுள்ளும் கூட, முரண்பாடுகளுக்கான சாத்தியங்கள் அங்கே உண்டு. வரிசெலுத்துவோரை தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அவர்கள் உணர்வதால், உள்ளூர்ப் பிரஜைகளைச் கலந்தாலோசிக்கும் போது சில சபை உறுப்பினர்கள் வருத்தமடைகின்றதை கல்கமுவ பிரதேச சபைச் செயலாளர் கண்டார். ஆகையால், இந்த சபை உறுப்பினர்களினால் அது தேர்தல் கட்டமைப்பு முறை மற்றும் பிரதிநிதித்துவ எண்ணக்கரு என்பவற்றிலான ஒரு தலையீடாக நோக்கப்படலாம்.

## வரவுசெலவுத் திட்டச் செயல்முறைகளில் ஊடகங்களின் வகிபாகம்

ஊடகங்களில் உள்ளூர்ப் பிரச்சினைகள் மற்றும் வரவுசெலவுத் திட்டம் தொடர்பான விடயங்களின் செய்தி சேகரிப்புக்கு தங்களை அனுமதிப்பதில் பிரதேச சபைகள் குறிப்பிடத்தக்க வகையில் உதவியாக இல்லையென உள்ளூர் ஊடகவியலாளர்கள் காண்கின்றனர். 2010 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினால் ஓர் ஆராய்ச்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது, அதில் 225 பிரதேச சபைகள் தொடர்பு கொள்ளப்பட்டு ஊடகங்களுக்கு வசதியளிக்கின்றனரா என அவர்கள் கேட்கப்பட்டனர். பிரயாணப் படிகள் போன்ற சில ஏற்பாடுகளை பல பிரதேச சபைகள் அளிக்கின்றதை அவர்கள் கண்டனர், எவ்வாறாயினும் பொதுவாக பொதுக் கேட்போர் கூட இடவசதி அல்லது உணவு மற்றும் சிற்றுண்டி வசதிகள் என்பவற்றினடிப்படையில் போதுமான ஏற்பாடுகளில்லாது இருந்தமை, வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களில் முழுமையாக ஈடுபடுவதற்கு

ஊடகவியலாளர்களுக்கு வசதியளிக்கப் படவில்லை என்பதையே அர்த்தப்படுத்துகின்றது.

அத்தோடு ஊடகவியலாளர்கள் தவிசாளர் மற்றும் செயலாளர்களுடன் பலமான உறவைக் கொண்டிருப்பதும் காணப்பட்டது, ஆயினும் பிரதேச சபையின் ஏனைய உறுப்பினர்களுடன் அவர்கள் அத்தகைய உறவைக் கொண்டிருக்கவில்லை. உதாரணத்துக்கு, திருகோணமலை பிரதேச சபைக்கு (9) உட்பட்ட ஒரு மாகாணப் பத்திரிகையாளர் தனது சக ஊடகவியலாளர்கள் வரி மற்றும் வரவுசெலவுத் திட்டச் செயன்முறை தொடர்பாக ஓர் குறித்த அளவிலான அறிவைக் கொண்டிருந்ததைக் கண்டார், ஆயினும் உள்ளூரப் பிரஜைகளில் பெரும்பான்மையோர் அதே போன்ற விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லையென அவர் நம்பினார். அத்தோடு ஊடகவியலாளர்கள் வரவுசெலவுத் திட்ட ஆவணங்கள் பலவற்றை அணுகுவதற்கு கடுமையாக முயற்சித்ததையும் ஆய்வுக் குழு கண்டதுடன், அது வரவுசெலவுத் திட்டம் தொடர்புபட்ட விடயங்களை ஊடகவியலாளர்கள் பயனுறுதியான வகையில் அறிக்கையிடுவதற்கு கடினமானதென்பதை நிரூபிக்கலாம். தொடர்பு கொண்ட ஏனைய ஊடகவியலாளர்கள், உள்ளூர் வரவுசெலவுத் திட்ட விவாதங்கள் சிவில் சமூக ஸ்தாபனங்களின் பிரதிநிதித்துவம், ஊக்கமான மக்கள் மன்றங்கள், வரவுசெலவுத் திட்டச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆர்வங் கொண்ட பிரஜைகளின் ஆதரவு என்பவை இல்லாதுள்ளதாக தெரிவித்தனர். ஆகவே, தங்களது வரவுசெலவுத் திட்டப் பிரேரணை கவனத்திற்கு எடுத்தக் கொள்ளப்பட்டதா அல்லது ஓரங்கட்டப்பட்டு புறக்கணிக்கப்பட்டதா என்பது பற்றி அத்தாட்சியை பிரஜைகள் கொண்டிருக்கவில்லை.

## பிரதேச சபைச் சட்டம், மற்றும் சபைக் கலந்துரையாடல்கள்

கலந்துரையாடல்கள் பல உள்ளூர்ப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்த தவறின என்கின்ற கரிசனைளை சில தவிசாளர்கள் கொண்டு வந்தனர். நாட்டினது நாட்டம் பிரதேச சபை சட்டம் சார்ந்ததாக இல்லையென்பதுடன், பதிலுக்கு கூட்டங்களின் போது உள்ளூர் சபை உறுப்பினர்கள் மத்திய அரசாங்க விடயங்களை

விரிவாக கலந்துரையாடுகின்றனர். உதாரணத்துக்கு, மத்திய அரசாங்க விடயங்கள் மீது கவனம் செலுத்துவது பிரதேச சபைக்கு உட்பட்ட சமூகப் பிரச்சினைகளின் முக்கியத்துவத்திலிருந்து திசைதிருப்பலாம் என்பதால், யக்கலமுல்ல மற்றும் கல்கமுவ பிரதேச சபைகளின் தவிசாளர்கள் அத்தகைய கரிசனைகளை எழுப்பினர். மேலும், பல கலந்துரையாடல்கள் கிராம அபிவிருத்திகள் மீது கவனம் செலுத்தவில்லையெனவும் பதிலுக்கு உள்ளூர்ப் பிரஜைகளுக்கு நன்மையற்ற தேசிய விடயங்களை எழுப்புவதில் சபை உறுப்பினர்கள் ஆர்வமாக இருந்ததை திருகோணமலையில் உள்ள ஊடகவியலாளர்கள் கண்டனர்.

மிகவும் முக்கியமானதொரு வழிகாட்டல் சுட்டியான வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சி அட்டவணை வரவுசெலவுத் திட்ட அழைப்பு ஓர் வேறுபட்ட பிரச்சினையாக உள்ளதுடன் அது ஓர் மறைமுகமான விதத்தில் தொடர்கிறது. உத்தேசிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சி அட்டவணை முதலில் உள்ளூராட்சி அரசாங்கத் திணைக்களத்தினால் தயார் செய்யப்பட்டு இறுதியாக 1999ஆம் ஆண்டின் உள்ளூராட்சி அமைச்சின் சீர்திருத்தங்கள மீதான விசாரணைகள் ஆணைக்குழுவினால் திருத்தியமைக்கப்படுவதுடன் உள்ளூர் வரவுசெலவுத் திட்டச் செயல்முறைக்கான கால அட்டவணை தொடர்பாக உள்ள ஒரேயொரு வழிகாட்டல் இதுவாகும். உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சி அட்டவணைப்படி, ஒவ்வொரு வருடமும் வரவுசெலவுத் திட்ட நடவடிக்கைகள் ஏப்பிரல் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்து டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைதல் வேண்டும். வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக நாம் உரையாடலில் ஈடுபட்ட 27 பிரதேச சபைகளில், இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட பிரதேச சபை மட்டுமே தக்க சமயத்திற்கு வரவுசெலவுத் திட்ட உருவாக்கத்தில் ஈடுபட்டது. அநேகமானவை அதிக அக்கறை கொள்ளாததுடன் நிகழ்ச்சி அட்டவணை பற்றி உண்மையிலேயே தெரியாதிருந்தன. செயன்முறை முழுவதுமே கால அட்டவணைப்படி இல்லாததுடன் வரிசெலுத்துவோரின் பங்கேற்பு, பொதுமக்கள் பரிசீலனை மற்றும் பங்கேற்புத் தீர்மானம் மேற்கொள்ளல் உட்பட உள்ளூர் வரவுசெலவுத்

திட்ட திட்டமிடல் தொடங்கி கணக்காய்வு வரை தொடர்பான பல முன்னேற்றமான வாய்ப்புகளை அது தடைசெய்தது.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்களுள் ஒருவரிடமிருந்தான பிரதிபலிப்புகள்**

முன்னாள் சிரேஷ்ட உதவிச் செயலாளருடன் பிரதேச சபைகளின் தற்போதைய நிலைமை பற்றிக் கலந்துரையாடும் போது, வரவுசெலவுத் திட்ட விடயங்களில் ஓர் கணிசமான செயல்முறைக் குறைபாடுகள் உள்ளதாகவும், மற்றும் இருக்கின்ற வழிகாட்டல்கள் உதாரணத்துக்கு, தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள், பின்பற்றப்படுவதில்லை எனவும் தெரிவித்தார். சிவில் சமூக ஸ்தாபனங்களும் அரசாங்க நிகழ்ச்சித் திட்டங்களும் அத்தகைய வழிகாட்டல்களை கூடுதல் சக்தியுடன் வலியுறுத்த முடியுமென்பதோடு, தங்களது உள்ளூர் பிரஜைகளுக்கு கூடுதல் பயனுறுதியுடன் சேவையாற்றுவதற்கு இயலும் வகையில், தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்கு உதவலாம். முன்னர் குறிப்பிட்டவாறு, தவிசாளரும் பிரதேச சபையை தனியொருவராக நடாத்துவதற்கு முனையலாமென்பதோடு, இது பொறுப்புக்கூறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றி கடுமையான கேள்விகளை எழுப்பலாம். இந்த விடயம் வரவுசெலவுத் திட்டம் தொடர்பானதொரு பிரச்சினையெனவும், பிரதேச சபை முறைமை மீது பிரஜைகள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின், அது கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டுமென இலங்கை நிர்வாக சேவை நம்புகிறது.

**அத்தகைய கண்ணோட்டங்களின் அடிப்படையிலான பரிந்துரைகள்**

வரவுசெலவுத் திட்டச் செயன்முறையில் பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களால் அளிக்கப்பட்ட பல்வேறு கண்ணோட்டங்களை பகுப்பாராய்ந்ததிலிருந்து தங்களது நேரடி அனுபவங்களால் எழுப்பப்பட்ட சில கரிசனைகளில் கவனம் செலுத்துவதற்கு திறன்

கொண்ட முறைமைகளை சுருக்கி சுட்டிக்காட்டுவது சாத்தியமாகும். இவை கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

- ஏனைய சபை உறுப்பினர்களின் அபிப்பிராயங்களை கவனத்தில் கொள்வதற்கான கடப்பாடுகளை வலியுறுத்துதல் மற்றும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை இரத்துச் செய்வதற்கான அவர்களது அதிகாரத்தைக் குறைத்தல் போன்ற, பிரதேச சபைக்குள் தவிசாளரின் அதிகாரத்தின் சீர்திருத்தம். வரவுசெலவுத் திட்ட உருவாக்கத்ததினுள் ஈடுபடுதலுக்கான ஒரு சிறந்த சமநிலையோடு, கட்டிட நிர்மாணம் மற்றும் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்களைத் தீர்மானிப்பது தொடர்பில் குறைந்தளவிலான அதிகாரச் செறிவையும் உள்ளடக்குகின்றது. பிரதேச சபை வரவுசெலவுத் திட்டச் சுழற்சி வட்டம் தொடர்பான விடயங்கள் மீதான அறிக்கையில் குறிப்பிட்டவாறு, தற்போது பிரதேச சபைச் சட்டத்திற்கு ஒரு தொடரான திருத்தங்கள் அனுமதிக்கப்படும் செயல்முறையிலுள்ளது. இது அத்தகைய அதிகாரங்களைக் குறைப்பதற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றை கூடுதல் நியாயமான விதத்தில் பகிர்ந்தளிப் பதற்குமான திறனைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், உள்ளக்கப்பட்டதிருத்தங்கள் அ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுவதையும், மற்றும் ஆ) தவிசாளரது அதிகாரம் தொடர்பாக உள்ளூர் பாத்தியதை கொண்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறித்த விடயங்களைக் கவனத்தில் கொண்டதாகவும் இருத்தல் முக்கியமானதாகும்.
- சபை உறுப்பினர்கள் கட்சி ஒழுங்கில் அமராமல், பதிலுக்கு சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் அமர்வதை கூடுதல் பலத்துடன் (சட்டத்தினால்) வலியுறுத்தப்படல் வேண்டும். இந்த நடைமுறை நடவடிக்கை சபை உறுப்பினர்கள் கட்சி வரிசைப்படி வாக்களிப்பதற்கு

அழுத்தம் அளிக்கப்படாததினால், தங்களது பிரஜைகளை சிறந்த விதத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அனுமதிக்கும். இது சட்டத்தை அறிமுகப் படுத்துகின்ற ஒரு விடயமல்ல, ஆனால் அதனை இறுக்கி பயனுறுதியான முறையில் அமுல்படுத்துவதாகும். சட்டத்தின் ஆட்சி பின்பற்றப்படுமாயின், அரசியல் கட்சித் தலையீடுகளால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவில்லை என பிரஜைகள் உணர்வதால் அவர்களது நம்பிக்கையை இது அதிகரிக்கும். குறுக்கீடுகளின்றி சபையின் எத்தரப்புகளிலிருந்துமான பிரேரணைகளை உறுப்பினர்கள் உண்மையாக கவனத்தில் கொள்வர் எனவும் மற்றும் கட்சி போதங்களை மீறி ஓர் அணியாக செயற்படுவர் எனவும் பிரஜைகள் நம்பிக்கை கொள்வர்.

- பிரதேச சபைக்கான வருவாய் திரட்டுதல் மீதான ஆய்வறிக்கையில் பிரேரிக்கப்பட்டவாறு, தேசிய வரவுசெலவுத் திட்டம் பிரதேச சபையின் மொத்த நிதியளித்தலில் ஓர் பெரும் பங்கை வழங்குதல் வேண்டும். இது நிதி ரீதியான ஸ்திரத்தன்மையின்மையை தடுப்பதற்கு உதவும் என்பதோடு, பிரதேச சபைகள் உள்ளூர் வரிகளை குறைப்பதற்கு அனுமதிக்கும், இதன் மூலம் உள்ளூர்ப் பிரஜைகளுக்கு கூடுதல் உதவியாக இருக்கம். இது, அவர்கள் எவ்விதம் தங்களது வருவாயை அதிகரிப்பது என்பது தொடர்பிலான பிரச்சினைகளுக்குப் பதிலாக, பயனுறுதியான செலவு செய்தல் மீது தவிசாளர் கவனம் செலுத்துவதற்கு அனுமதிக்கும்.
- பண்டாரவளை நகர சபையின் வெற்றி, மற்றும் கல்கமுவ பிரதேச சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற புதிய முன்னெடுப்புகள் என்பவற்றின் பின்னணியில், வரிசெலுத்துவோரின் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளில் ஈடுபடுதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வரவுசெலவுத் திட்டத் தீர்மானங்களில் உள்ளூர்ப் பிரஜைகள் கலந்து

கொள்வதற்கான கூடுதல் விழிப்புணர்வை முன்னேற்றுவதில் சம்பந்தப்படுதல் வேண்டுமென்பதுடன், எதிர்வரும் வரவுசெலவுத் திட்டங்களுக்காக ஆலோசனைகள் மற்றும் பிரேரணைகள் என்பவற்றை முன்மொழிவதற்கு கூட்டங்களில் கிரமமாக கலந்துகொள்வதற்கான ஒரு ஆற்றலை அவர்களுக்கு அளிக்கின்றது. இது முன்னைய அறிக்கைகளிலும் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், பண்டாரவளை நகர சபையைப் போன்று, வரிசெலுத்துவோர் மற்றும் பிரதேச சபை என்பவற்றுக் கிடையில் சிறந்த உறவை உருவாக்குவதற்கான ஒரு முறையாகவும் செயற்படும். அத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு உள்ளூரப் பிரஜைகளும் கூட ஊக்குவிக்கப்படுதல் வேண்டும், எனவே முறைமைகளில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதை உறுதிப் படுத்துவதற்கு, ஏனைய வழிகள் மூலம் முகாமைத்துவச் சீர்கேடுகளிலான ஓர் உறுதியான குறைத்தலோடு, விடயங்கள் மீது வரிசெலுத்துவோர் கருத்துத் தெரிவிப்பதற்கான ஓர் உண்மையான வாய்ப்பு இருப்பதும் முக்கியமானதாகும். மேலும், எதிர்க் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேம்படுத்தப்படுதல் வேண்டும், இதன் மூலம் அனைத்து பிரதிநிதிகளும் செவிமடுக்கபட்டும் மற்றும் பல்தரப்பட்ட அரசியல் தரப்புகளிலிருந்து அனைத்து கருத்துக்களும் தெரிவிக்கப்படுவதற்கும் முடியும்.

- விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் தெரிவித்த குறிப்புகளின் பின்னணியில், சமூகத்திலிருந்து சபைக்கு பிரேரணைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் கருத்துக்களை கொண்டு வருவதற்குமாக தெளிவான பொறிமுறைகள் வலியுறுத்தப்படுதல் வேண்டும். தவிசாளர், மற்றும் அநேகமான வெளிவாரியான சிவில் சமூக ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் சபைக்கு யோசனைகளைக் கொண்டு வருவதற்கு ஓர் உத்தியோகபூர்வ செயன்முறையை அளிக்கும்

பொறிமுறைகள் ஏற்படுத்தப்படலாம். இது, உள்ளூர்ப் பிரஜைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி மற்றும் அவர்களது கருத்துக்களை தெரிவிக்கும் உறுப்பினர்களது கடமை தொடர்பான எண்ணக்கருவை ஓரளவிற்குப் பாதிப்பதாக நோக்கப்படுகையில், தங்களது கருத்துக்கள் எடுத்துரைக்கப்படவில்லையென சில பிரஜைகள் உணர்வதினால், பிரதேச சபையை தற்போது சூழவுள்ள பல பிரச்சினைகள் உள்ளூர்ப் பிரதிநிதிகள் மற்றும் பிரஜைகள் நேரடியாக செவிமடுக்கப்படுவதன் அவசியத்தை உணர்த்துகிறது.

- இயலுமான வரை அதிகளவிலான சபைக் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளும் முகமாக ஊடகவியலாளர்களுக்கு கூடுதலான ஏற்பாடுகள் அளிக்கப்படுதல் வேண்டும். இதற்கான நிதியளித்தல் கடினமானதாக இருக்கக் கூடியதாக இருக்கையில் தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்து கூடுதலான நிதி பெறப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. அத்தோடு வரவுசெலவுத் திட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உறுதியளிக்கப்பட்ட வழிவகைகள் அளிக்கப்படுதல் வேண்டும், அதன் மூலம் உள்ளூர் வரவுசெலவுத் திட்டம் தொடர்பான நிலைமையை அவர்கள் கண்காணிப்பதற்கு இயலுமாக இருக்கும். இது அவர்கள் தகவல்களை வரிசெலுத்துவோருக்கு பரப்புரை செய்வதற்கு அனுமதிக்கும் என்பதோடு ஓர் பரிசீலனைப் பொறிமுறையாகவும் செயற்படும்.

- மத்திய அரசாங்கத்தின் விடயங்களை விட உள்ளூர் விடயங்கள் கலந்துரையாடப்படுவது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். இது, பொதுமக்களின் கூடுதலான விழிப்புணர்வு மற்றும் மேலே குறிப்பிட்ட முறைகளிலிருந்தான பரிசீலனை என்பவை மூலமாக வலியுறுத்தப்பட முடியும், வரிசெலுத்துவோர் முறைப்பாடு செய்து தங்களது நலன்களுக்கான விடயங்களின் கலந்துரையாடல்

களுக்காக மேலும் அழுத்தங்களை இடக்கூடுமென்பதால் சம்பந்தப்பட்ட விடயங்களை கலந்துரை யாடுவதற்கு இது உறுப்பினர்களை மறைமுகமாக ஊக்குவிக்கும்.

## எதிர்கால மாற்றங்களுக்காக வரவுசெலவுத் திட்டச் செயல்முறையின் பாத்தியதை கொண்டோரின் அபிப்பிராயங்களை கவனத்தில் கொள்ளுதல்

வரவுசெலவுத் திட்டச் செயன்முறையைச் சூழ்ந்ததான வெவ்வேறுபட்ட செயற்பாட்டாளர்களால் எழுப்பப்பட்ட பல விடயங்கள் உள்ளன. இந்த செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்களிலிருந்து உள்ளூர் பிரஜைகள் அல்லது பிரதேச சபையின் தவிசாளர் வரை உள்ளதோடு, இவர்கள் ஒவ்வொருவரினதும் கண்ணோட்டங்கள் பிரதேச சபையைச் சுற்றியுள்ள விடயங்கள் தொடர்பில் எவ்வாறு கவனம் செலுத்துவது பற்றி பிரத்தியேகமான உள்ளறிவை வழங்குகின்றது. சபை மற்றும் உள்ளூர் பிரஜைகள் போன்ற ஏனைய செயற்பாட்டாளர்களிடையே மோசமான உறவே உள்ளதென்பதுடன், இது மேம்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், உதாரணத்துக்கு தவிசாளரின் அதிகாரம் அல்லது கட்சி வரிசையொழுங்கு தொடர்பாக கூட்டங்களின் பௌதிகக் கட்டமைப்பு என சபையினுள்ளேயே கரிசனைகள் உள்ளன. இக்கரிசனைகள் வீணானவையல்ல, இந்தச் செயன்முறையினுள் உள்ள குழுக்கள் ஒவ்வொன்றும் மற்றையதுடன் திறந்த முறையில் உரையாடுவதற்கும், மற்றும் இந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டவாறு, அத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மீது செயலாற்றுவதற்கும் தயாரெனின், உண்மையில் வெற்றிகரமான வகையில் கவனம் செலுத்தப்பட முடியும். பண்டாரவளை நகர சபை மற்றும் அதன் உள்ளூர் பிரஜைகள் மற்றும் தவிசாளர் ஆகிய இரு தரப்புகளிலுமிருந்தான நம்பிக்கை நோக்கு என்பன வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதல் என்பன நேர்மையாக முயற்சிக்கப்படுகையில், அது வரவுசெலவுத் திட்டச் செயன்முறையின் நிறைவேற்றப்படுதல் அதே போன்று அதன் பெறுபேறுகள் என்பவற்றுடன் மனநிறைவடையும் திருப்தியுற்ற உள்ளூர் பிரஜைகளைக் கொண்டிருப்பதற்கு வழி வகுக்கும் என்பதைக்

காட்டுகின்றது. எனவே, செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் குறைகள் பற்றி அறிவதற்கும் மற்றும் அதற்கமைய அவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கும் இயலுமாக இருக்குமென்பதால், மற்றைய குழுக்களுடன் உரையாடல்களை ஆரம்பிப்பதற்கும் மற்றும் புரிந்து கொள்வதற்கும் இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பயன்படுத்த முடியும்.

# யக்கலமுல்ல பிரதேச சபை

## யக்கலமுல்ல பிரதேச சபையின் முன்னெடுப்பு

யக்கலமுல்ல பிரதேச சபையின் பிரஜைகள் கலந்துரையாடல் என்பது அதன் தவிசாளரினால் கொண்டு வரப்பட்ட ஓர் முற்றிலும் புதியதான முன்னெடுப்பாகும். பிரதேச சபை 44 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதென்பதுடன், ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் 5 பிரதிநிதிகள் (மொத்தமாக 220 பிரதிநிதிகள்) கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக அழைக்கப்பட்டனர். தவிசாளர், எதிர்க் கட்சித் தலைவர், ஆளுந்தரப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சமூக அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் இந்தக் கலந்துரையாடலில் பிரதிநிதித்துவம் செய்தனர்.

அத்தகையதொரு கலந்துரையாடலானது, பிரதேச சபையின் அரசியல் செயன்முறையில் உள்ளூர் பிரஜையின் பங்குபற்றுதல் வரவுசெலவுத் திட்டம் தொடர்பான விடயங்கள் மற்றும் பங்கேற்றல் திட்டமிடல் மீது செல்வாக்கையும் மற்றும் ஓர் குரல் எழுப்பும் தன்மையையும் பெற்றுக்கொள்வதற்கு முயல்வதைக் காண்பிக்கின்றது, இதன் மூலம் அவர்களது வரிகள் எப்படி செலவிடப்படுகிறது என்பதை அவர்கள் தெரிவு செய்யலாம். இலங்கையில் பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதல் மீதான வேலைத்திட்டத்தின் இலக்குகளை கலந்துரையாடல்களும் உறுதிப் படுத்துகின்றது என்பதுடன் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் மற்றும் பிரதேச சபையின் ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றில் கூடுதலான பிரஜைகளின் பங்குபற்றுதலை அது உள்டக்குவதால், தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களின் ஆர்வத்திற்குரியதாக அது இருக்கின்றது. ஆகவே வேலைத்திட்டத்திலிருந்து பிரஜைகளின் வலுவான பங்கேற்றலின் மேம்படுத்தல் யக்கலமுல்ல பிரதேச சபையின் செயன்முறைகளில் தெளிவான வகையில செல்வாக்குச் செலுத்துகின்றதுடன், குறிப்பாக கூடுதலான நம்பிக்கை மற்றும் நேர்மறையான உறவு என்பவற்றின் மூலமாக தீர்மானம் மேற்கொள்வோர் மற்றும் உள்ளூர் பிரஜைகள் ஆகிய இரு தரப்புகளுக்கும் நன்மையளிக்க காணப்படுகின்றது.

## உள்ளூர் பிரஜைகளின் ஆர்வம்

யக்கலமுல்ல பிரதேச சபையில் திறந்த கேட்போர் கூடத்தின் கலந்துரையாடல்களில் இருந்தான அவதானிப்புகள் உள்ளூரப் பிரஜைகளிடமிருந்தான ஓர் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தியதுடன், கலந்துரையாடல்கள் சர்ச்சைக்குரிய விடயங்களையும் கொண்டிருந்ததோடு, அவற்றை சபை கவனம் செலுத்தி விவாதிப்பதற்கு தயாராக இருந்தது. வரவுசெலவுத் திட்டம் மற்றும் திட்டமிடல் தொடர்பான விடயங்களில் பிரதேச சபையின் பிரதேசம் முழுவதிலுமிருந்தான பிரதிநிதிகள் பலரும் தங்கள் குரல்களை எழுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டதினால், பங்குபற்றியோரின் அளவு ஓர் வலுவான விவாதத்திற்கு தெளிவான முறையில் வசதியளித்தது. இது, அத்தகைய கலந்துரையாடல்கள் நடைபெறுவதை அனுமதிப்பதற்கு போதுமான வசதிகளை அரிதாகவே கொண்டுள்ள ஏனைய பிரதேச சபைகளுடன் ஒப்பிடுகையில் அசாதாரணமானதொன்றாகும். இது மாத்திரமன்றி, அது அரச உத்தியோகத்தர்கள் போன்ற அரச பிரதிநிதிகள் (பொலிஸ், கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட) சபைச் செயலாளர் மற்றும் உள்ளூர் பிரஜைகள் ஆகியோருக்கிடையில் ஓர் வலுவான முத்தரப்பு உறவையும் காண்பிக்கின்றது.

## படைப்பாற்றலும் திறந்த வகையிலான கலந்துரையாடலும்

கலந்துரையாடலுக்காக வந்த அதிக தொகையினர் பிரதேச சபையின் வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தில் பங்கேற்பதற்கு உள்ளூர் பிரஜைகளிடமிருந்தான ஆர்வத்தை தெளிவாக காட்டியது, அது, அபிவிருத்தி மற்றும் அரசியல் செயல்முறைக்கு புதிய யோசனைகளையும் அளித்ததோடு, பிரதேச சபை மற்றும் அதன் தீர்மானம் மேற்கொள்பவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படுவதற்கான ஒரு புலனாய்வு மற்றும் கண்காணிப்பு பொறிமுறையாகவும் செயற் படுதல் ஆகிய இரண்டையும் அளித்தது. உள்ளூர் பிரஜைகள், தாம் பழி வாங்கப்படுவோம் என்ற அச்சமின்றியும் மற்றும் பிரதேச

சபை மற்றும் அதன் உள்ளூர் பிரஜைகளுக்குமிடையிலான நம்பிக்கையின் உணர்விலும், தங்களது கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதில் விருப்பமும் மற்றும் உறுதியும் கொண்டிருந்தனர்.

**பிரதிநிதித்துவம்**

கலந்துரையாடலானது பிரதேச சபை முழுவதற்குமாக பரந்த பிரதிநிதித்துவத்தையும் அளித்ததுடன், அழைப்பின்மையாலோ அல்லது பங்குபற்றுதலின்மையாலோ கலந்துரை யாடலில் இருந்து எந்தொரு விடயமோ அல்லது பிரஜைகளின் குழுக்களோ தனிமைப் படுத்தப்படவில்லை. வரவுசெலவுத் திட்டம் மற்றும் திட்டமிடல் விடயம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளுதல் அத்தகைய தீர்மானங்களினால் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைக் கவனத்தில் கொள்வதற்கு மறக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதால், இது கலந்துரையாடலின் ஒரு முக்கிய அம்சமாகும். வரவுசெலவுத் திட்டம் மற்றும் அபிவிருத்திக்கான இந்த முறையான திட்டங்கள் அத்தகைய தீர்மானங்களால் பாதிக்கப் படக்கூடிய ஏதேனும் குழுவின் அபிப்பிராயங்களை எப்போதும் பிரதிபலித்தது.

**சமூக சபை**

யக்கலமுல்லவின் முன்னெடுப்பு, பிரதேச சபை மட்டத்தில் முதன் முதலாக ஓர் சமூக சபையின் ஸ்தாபித்தலுக்கு வழிவகுத்தது. இந்த சபை புவியியல் சார்ந்த, இனத்துவ ரீதியான அல்லது நியாமான பிரதிநிதித்துவப்படுத்துதலில் தலையீடு செய்யக்கூடிய ஏனைய காரணிகளைக் கவனத்தில் கொள்ளாது, பிரதேச சபை முழுவதையும் சமனாக பிரதிநிதித்துவம் செய்கின்றது. புறக்கணிக்கப்படக்கூடிய அல்லது கவனம் செலுத்தப்படாது இருக்கக்கூடிய சமூகத்தின் தேவைகள் அனைத்துக்காகவும் இது குரல் கொடுக்க முடியுமென்பதால், வலுவான பங்கேற்றல் வரவுசெலவுத் திட்டத்தில் ஈடுபடுவதற்கான ஓர் மிகவும் பொருத்தமான மேடையாக இது இருக்கும். வரவுசெலவுத் திட்டங்களின் நிறைவேற்றுதலில் கண்காணிப்புச் செயன்முறையின் ஓர் பகுதியாக

பிரஜைகள் உள்ள பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டத்தைக் காணபிப்பதாக இருக்கும்.

**உதாரணமாக முன்னிற்றல்**

பிரதேச சபைகள் அண்மையில் வகுத்துக் கொண்ட பாதை கூடுதலான மக்கள் பங்கேற்றல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறத்தக்க வரவுசெலவுத் திட்டமிடலை போதித்துள்ளது என்பது தெளிவு. வரவுசெலவுத் திட்டமிடுதலில் உள்ளூர் பிரஜைகள் எவ்வாறு பங்குபற்ற ஆரம்பித்துள்ளனர் என்பதும் மற்றும் சபை மற்றும் அதன் உறுப்பினர்கள் மீது அழுத்தங்களை இடுவதற்கு தங்களது சொந்த முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளமையும் நடைமுறையில் காண்பிக்கப்பட்டுள்ளதினால், ஒரு செயல்திட்ட அணியாக அதன் பிரதான குறிக்கோள் ஓரளவிற்கு எட்டப்பட்டுள்ளது. அத்தகையதொரு செயன்முறையை பிரதேச சபை தொடருமாயின், அது வரிசெலுத்துவோரிடமிருந்து தொடர்ச்சியான மற்றும் அதிகரித்த பங்கேற்றலைப் பெற்றுக்கொள்ளுமென்பதுடன், பிரதேச சபையில் உள்ளூர் பிரஜைகளின் கரிசனங்களை அவை அதிகளவிற்கு அறிவதினால், பதிலுக்கு சபையின் ஆற்றலில் கூடுதலான நம்பிக்கையை வைப்பர். அது, வரிசெலுத்துவோருக்கு உரித்தான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான பாதையைக் காண்பித்து, இலங்கை முழுவதிலுமுள்ள ஏனைய பிரதேச சபைகளுக்கான ஓர் உதாரணமாக செயற்படுகின்றதுடன், நாட்டிலுள்ள ஏனைய பிரதேச சபைகள் இம்முறைமையை தத்தெடுத்துக் கொள்வதற்கான முன்னுதாரணமாக திகழுமெனவும் நம்பலாம்.

# தேசிய பின்னணியில் வரவுசெலவுத் திட்டச் செயல்முறை

## உள்ளூர் நிலையிலிருந்து தேசிய நிலைக்கு

இந்த ஆய்வு உள்ளூர், குறிப்பாக பிரதேச சபைகளின் வரவுசெலவுத் திட்டச் செயல்முறைகள், மீது கூர்மையான கவனத்தை எடுத்துக் கொண்ட வேளையில், ஓர் இறுதியான குறிப்பிடுதலை தேசிய வரவுசெலவுத் திட்டத்துக்கு மேற்கொள்வது முக்கியமானதாகும். முன்னைய ஆய்வறிக்கைகளில் சுட்டிக்காட்டியவாறு, தேசிய வரவுசெலவுத் திட்டம் பிரதேச சபையின் வருவாயில் 30% ஐ பங்களிக்கின்றது, எனவே தேசிய செயல்முறைகளைச் சுற்றியுள்ள விடயங்களைக் கவனத்தில் கொள்வது பொருத்தமானதாகும். தனியே பிரதேச சபை மட்டுமன்றி இலங்கை முழுவதற்குமான பரந்துபட்ட விடயங்கள் மீதான தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் முக்கியத்துவம் காரணமாக, அது நிச்சயமாக புறக்கணிக்கப்பட முடியாத ஒரு தலைப்பாகும். சர்வதேச வரவுசெலவுத் திட்டப் பங்குடமையால் (IBP) 2010 இல் நடாத்தப்பட்ட திறந்த வரவுசெலவுத் திட்டச் சுட்டுக்கு (OBI) அமைவாக வரவுசெலவுத் திட்டத்தின் வெளிப்படைத்தன்மை அதுவாகவே அதிகரிக்கின்ற போக்கைக் காண்பிக்கின்றது. 2006 இல் அது 47/100 புள்ளிகளை ஈட்டியது, அது சில வரவுசெலவுத் திட்டத் தகவல்கள் வழங்கப்பட்டமையை அர்த்தப்படுத்துகன்றது. இது 2008 இல் 64/100 ஆகவும் இறுதியாக 2010 இல் 67/100 ஆகவும் அதிகரித்தமை கணிசமான தகவல்கள் அளிக்கப்படுகின்றதைக் கருதுகின்றது. எவ்வாறாயினும், தேசிய வரவுசெலவுத்ட திட்டச் செயல்முறையைச் சூழந்ததாக முக்கியமான விடயங்கள் இல்லையென்பதைக் கருதமாட்டாது, இருப்பினும், அத்தகைய ஒரு புள்ளி மேலதிக விசாரணையைத் தேவைப்படுத்தாது என நம்புவதை எளிதாக்கலாம். பிரச்சினைகளைக் கண்டுபிடித்து மற்றும் பரிந்துரைகளை வழங்குகின்ற, அத்தகையதொரு விசாரணைக்கு கவனம் செலுத்துவதை இக்கட்டுரை எண்ணுகின்றது.

தேசிய வரவுசெலவுத் திட்டம் தற்போது நிதியமைச்சினால் உருவாக்கப்படுகின்றதுடன், வரவுசெலவுத் திட்டம் சட்டமன்றத்தினால் அனுமதிக்கப்படுகின்றது. சட்டவாக்க மன்றம் பின்னர் பல்வேறு அமைச்சு வரிசைகளுக்கு, உதாரணத்துக்கு, கல்வி அமைச்சு

அல்லது உள்ளூராட்சி அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளுக்கு என, நிதியை ஒதுக்குவதற்கு இயலுமாக இருக்கும். சட்டவாக்க மன்றம் வேறுபட்ட பயன்பாடுகளுக்காக சில அமைச்சுகளிலிருந்து நிதியை பெறுவதற்கு முடியுமாக இருந்த போதிலும், வெவ்வேறு அமைச்சுக்கள் பின்னர் தங்களது நிதிகளை கூடுதல் சுயாதீனத்துடன் ஒதுக்கும். கொள்கையளவில் இத்தகையதொரு நடை முறையுடன் பிரச்சினைகள் இல்லை என்பது சாத்தியமாக இருக்கையில், யதார்த்தத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டம் தொடர்பான பல செயன்முறைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் என்பவற்றினுள் ஊடுருவியுள்ள ஊழல் குறித்து பல கரிசனைகள் உள்ளன. ஆகவே, இலங்கை முழுவதிலுமுள்ள வரிசெலுத்துவோருக்கு சேவையாற்றுவதற்கு தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் பயனுறுதிக்கு அவை தடை ஏற்படுத்துவதால், அத்தகைய பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவது முக்கியமானதாகும்.

### வரிசெலுத்துவோர் விழிப்புணர்வும் பங்கேற்றலும்

தற்போது வரிசெலுத்துவோர் தேசிய வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகள் பற்றி இன்னமும் பெரியளவிற்கு அறியாதுள்ளனர். பலரும் வரிகளாக தாங்கள் கொடுப்பனவு செய்யும் பணத்திற்கும், அதனால் அரசாங்கத்திடமிருந்து அவர்கள் பெற வேண்டிய சேவைகளுக்கும் இடையேயான தொடர்பை மேற்கொள்வதற்கு தவறுகின்றனர். இந்த விழிப்புணர்வின்மையானது, வரிசெலுத்துவோரிடமிருந்து முறைப்பாடுகளேதும் இருக்காதென, அறிந்து கொண்டு வரவுசெலவுத் திட்டச் செயன்முறைகளுள் அவர்களை இன்னமும் கொண்டு வருவதற்கு சட்டவாக்கம் செய்பவர்கள் தெரிவு செய்யாததால், வரவுசெலவுத் திட்டத்தை சட்டவாக்கம் செய்து நிறைவேற்றுபவர்களால் வரி செலுத்துவோரின் போதிய விழிப்புணர்வின்மை ஓர் குறிப்பிட்டளவிற்கு துஷ்பிரயோகிக்கப்படுவதையே அர்த்தப்படுத்துகின்றது. இது, மக்கள் பணத்தின் முகாமைத்துவச் சீர்கேடு மற்றும் தெரிந்தவர்களுக்கான சலுகையளிப்புகள் போன்ற நடைமுறைகள் மூலமான ஊழல் என்பவற்றுக்கான பெரும் இடைவெளியை விட்டு வைக்கின்றது.

இறுதியாக, அத்தகையதொரு புரிந்து கொள்ளுதல் மற்றும் அறிவு என்பவையில்லாதிருத்தல் என்பது வரிசெலுத்துவோர் தேசிய வரவுசெலவுத் திட்டச் செயன்முறையில் பங்குபற்றுவதற்கு உந்தப்படவில்லை என்பதைக் கருதுவதுடன், அங்கு மக்கள் பரிசீலனை மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதையே அர்த்தப்படுத்துகின்றது.

**தகவல்களுக்கான உரிமை**

அதன் வரவசெலவுத் திட்டம் தொடர்பான தீர்மானங்களுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டியதாக இருப்பின், வரிசெலுத்துவோர் அத்தீர்மானங்களை தாம் விரும்பும் போது கட்டுப்பாடுகளின்றி சுதந்திரமாக அவதானிப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், தற்போது தேசிய மட்டத்திலான வரவுசெலவுத் திட்டத்தின் ஆவணங்களை பிரஜைகள் பார்வையிடுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறை எதுவுமில்லை. சில மறைமுகமான கொள்கைகள் தேசிய வரவுசெலவுத் திட்டம் பற்றி சிறு உட்பார்வையை வரிசெலுத்துவோருக்கு அளிக்கும் வேளையில், வரிசெலுத்துவோர் பார்வையிடுவதற்கு விரும்பும் வரவுசெலவுத் திட்டம் தொடர்பான ஏதேனும் தகவல்களுக்கான வழிவகைகளை நிரந்தரமாக அளிக்கும், தகவல் சட்டத்துக்கான முழு உரிமையொன்றுக்குகான பதிலீடாக இது அமைய முடியாது. ஓர் பிரதேச சபை வரவுசெலவுத் திட்டம் போலன்றி, தேசிய வரவுசெலவுத் திட்டம் கணிசமானளவு பெரிதாகவும், மற்றும் அதிகளவில் விரயம் மற்றும் ஊழல் என்பவற்றுக்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கலாமென்பதாலும் இது குறித்த முக்கியத்துவம் கொண்டது. பொதுமக்களின் பார்வையிலிருந்து அரசாங்கம் எதனையும் மறைப்பதற்கு முயலவில்லையென மக்கள் உணர்வார்களாயின், பிரஜைகளும் அரசாங்கத்தைக் கூடுதலாக நம்புவார்களென்பதோடு, தகவல்களுக்கான உரிமைச் சட்டம் ஒன்று மட்டுமே இதனை உத்தரவாதப்படுத்தும்.

## பயனறுதியற்ற கணக்காய்வுகள்

தற்போது தேசிய வரவுசெலவுத் திட்டச் செயல்முறையினுள் கணக்காய்வு உள்ளூர் வரவுசெலவுத் திட்டங்களுக்கானதை விட ஓர் அதிகளவில் உள்ளது. எவ்வாறாயினும், கணக்காய்வுகள் செம்மையானவை அல்லது கணக்குகளை பரிசீலிப்பதிலும் மற்றும் இந்த தகவல்களை பிரஜைகளுக்கு பரப்புரை செய்வதில் முற்றிலும் பயனுறுதியானவை என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. மேலான கணக்காய்வு நிறுவனங்களிலிருந்தான வருடாந்த கணக்காய்வு அறிக்கை உண்மையில் வரவுசெலவுத் திட்டக் கணக்குகளைப் பரிசீலிக்கின்றன. எவ்வாறாயினும், அது மக்களைச் சென்றடைவதற்கு மிக அதிக காலத்தை எடுக்கின்றது. அதாவது, கணக்காய்வு அறிக்கை வெளியிடப்படும் வேளையில், இந்த வரவுசெலவுத் திட்டம் மறக்கப்பட்டு, பதிலுக்கு அடுத்த வருடாந்த வரவுசெலவுத் திட்டம் மீது பார்வைகள் குவிந்திருக்கும். இந்தக் கணக்காய்வு அறிக்கையின் அடிப்படையில் பிரஜைகளிடமிருந்து இதுவரை குறைந்தனவிலான அழுத்தங்களே இருந்தது என்பதால், தீர்மானம் மேற் கொள்வோர்கள், ஒரு மாற்றத்துக்கு, இத்தகைய கணக்காய்விலிருந்து சிறிது அழுத்தங்களை உணர்ந்தனர் என்பதை இது கருதுகின்றது. அந்த கணக்காய்வறிக்கைகளின் விரிவான தன்மையும் வரவுசெலவுத் திட்டம் போலவே அறிக்கையும் நீண்ட மற்றும் தொழில்நுட்ப ரீதியானதாக உள்ளது பிரஜைகள பலரை அதனை விளங்கிக் கொள்வதிலிருந்து தடை செய்கின்றது. கணக்காய்வறிக்கை என்ன கூறுகின்றது என்பதை அவர்களால் விளங்கிக் கொள்வதற்கு முடியாவிட்டால் தேசிய வரவுசெலவுத் திட்டம் மீதான பரிசீலனைக்காக வரிசெலுத்துவோர் அவ் ஆவணத்தை உபயோகிப்பதற்கு முடியாது.

## தொழில்நுட்ப ரீதியான தன்மை மூலமாக வரிசெலுத்துவோரை தனிமைப்படுத்தல்

கணக்காய்வறிக்கையின் தொழில்நுட்பரீதியான தன்மையுடனான ஒத்த தன்மையை தேசிய வரவுசெலவுத் திட்டம் பகிர்வதுடன், அதனளவிலேயே கணிசமான சிக்கல் தன்மையானதும்

மற்றும் புரிந்து கொள்வதற்கும் கடினமானது. அது அதிகளவிலான நிதி மற்றும் பெருந் தொகையிலான பணம் என்பவற்றின் ஒதுக்கீடுகளை உள்ளடக்குவதால், அதன் தொழிலநுட்ப ரீதியான தன்மை உள்ளூர் வரவுசெலவுத் திட்டங்களை விட கூடுதலாக இருக்கலாம். உள்ளூரப் பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக கட்டுரையில் குறிப்பிட்டவாறு, வரவுசெலவுத் திட்ட ஆவணங்களின் தொழில்நுட்ப ரீதியான தன்மை வரிசெலுத்துவோரை அதன் செயன்முறைகளிலிருந்து தனிமைப்படுத்தி, வரவுசெலவுத் திட்ட நடைமுறைகளில் அவர்களுக்கு குறைந்த ஆர்வத்தையே அளிக்கும். வரிசெலுத்துவோர் தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் நிதிகள் மீது தங்களது பிரதிநிதிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கு தவறுவதால், வரவுசெலவுத் திட்ட விடயங்களிலான ஆர்வமின்மை பொறுப்புக்கூறாமைக்கு இடம் வைப்பதால், வரிசெலுத்துவோர், தங்கள் வரிக் கொடுப்பனவுகள் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் என்கின்ற அறிவு இல்லாதவராக, வரிக் கொடுப்பனவுகளை விருப்பின்றி செலுத்துகின்றனர்.

**பரிந்துரைகள் மற்றும் தீர்வுகளைக் காணுதல்**

மேலே சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறுதல் மற்றும் வரிசெலுத்துவோரின் ஆர்வத்துடனான பங்கேற்பு என்பவை தொடர்பில் தேசிய வரவுசெலவுத் திட்டச் செயன்முறையை மேம்படுத்த உதவுவதற்கு பல பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட முடியும்.

- வரிசெலுத்துவோர் தற்போது எந்த ஆவணங்கள் அல்லது தகவல்களை தேடுதல் வேண்டுமென்பது பற்றி எதுவும் தெரியாதிருப்பதால், அவர்களிடையே வரவுசெலவுத் திட்ட நடைமுறைகள் பற்றிய கூடுதலான விழிப்பணர்வை அரசாங்கம் மேம்படுத்தல் வேண்டும். இது அதிகளவிலான ஊடக செய்தி வடிவங்கள் மூலமாகவும் வரலாம், வரிசெலுத்துவோர் ஆர்வத்துடன் தொடர்புபடுத்தக்கூடிய, கூடுதலாக விளங்கிக் கொள்ளக்கூடிய வடிவில் தற்போதைய வரவுசெலவுத் திட்ட முறைகளைச் சமர்ப்பிக்கலாம்.

பொதுமக்கள் வரவுசெலவுத் திட்டச் செயல்முறைகளில் கூடுதல் நம்பிக்கையும் ஆர்வத்தையும் கொண்டிருப்பதற்கும் மற்றும் அதனால் தங்களது வரிகளின் செலவிடல் பற்றி கூடுதல் அறிவுள்ளவாராகவும் இருப்பதற்கு, மேலும் மக்களின் பங்குபற்றுதல் கூடுதலாக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

- உள்ளூர் வரவுசெலவுத் திட்டங்களுக்காக முன்னைய அத்தியாயங்களில் பரிந்துரைக்கப்பட்டவாறு தகவல் உரிமைக்கான சட்டம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். இது தாம் விரும்புகின்ற வரவுசெலவுத் திட்ட ஆவணங்கள் எதனையும் பார்வையிடுவதற்கான அடிப்படைத் தகுதியை பிரஜைகளுக்கு அளிப்பதால், பொது வளங்கள், மற்றும் எவ்வாறு அவை செலவிடப்படுகின்றன என்பதன் மீது பிரஜைகளும் (மற்றும் ஊடகங்களும்) ஓர் கூர்மையான பார்வையைக் கொண்டிருப்பதற்கு இயலச் செய்வதால், ஊழல் மற்றும் வினைத்திறனின்மை என்பவற்றுக்கான வாய்ப்பைக் குறைக்கின்றது. வரிசெலுத்துவோர்களால் இத்தகைய சட்டம் உபயோகிக்கப்படுவதில் வரவுசெலவுத் திட்டச் செயல்முறையினுள் தீர்மானம் மேற்கொள்வோர் தலையீடு செய்வதற்கு அனுமதிக்கப்படக்கூடாதென்பதால், இந்தச் சட்டம் பழிவாங்கப்படுதல் எனும் ஆபத்தின்றி தகவல்களைப் பெறுவதற்கான அணுகுவழிகளை அளிப்பது முக்கியமானதாகும்.

- தேசிய வரவுசெலவுத் திட்டமும் கூட, உள்ளூர்ப் பிரஜைகள் வரவுசெலவுத் திட்டக் கட்டுரையில் பரிந்துரைக்கப்பட்டது போன்று, வரிசெலுத்துவோருக்காக ஓர் பிரஜைகள் வரவுசெலவுத் திட்ட வடிவில் எளிமைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகையதொரு வரவுசெலவுத் திட்டத்தின் எளிமைத்தன்மை காரணமாக ஒப்பீட்டளவில் இலகுவாக நிலைமைகள் கண்காணிப்பதற்கு முடியுமென அவர்கள் உணர்வதால், இது வரிசெலுத்துவோருக்கு தேசிய வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்தில் கூடுதல் ஆர்வத்தைக்

கொடுக்கும். அத்தகையதொரு பரிந்துரை அனைத்து வரவுசெலவுத் திட்டங்களுக்குமான சாதகத்தன்மையைக் கொண்டிருப்பது தெளிவு என்பதால், இந்த அத்தியாயத்தில் இடப்பட்டுள்ள மிக முக்கியமான கொள்கை நடைமுறைகளில் ஒன்றாக இது உள்ளது.

- மேலான கணக்காய்வு நிறுவனத்திலிருந்தான கணக்காய்வு அறிக்கை ஓர் கூடுதல் நேரப் பொருத்தமான வகையில் தாமதமின்றி அந்த சமயத்துக்கான வரவுசெலவு திட்ட நடவடிக்கைகளுக்கு தொடர்புபடும் வகையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இது, தேசிய வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் வேளையில் இந்த செயன்முறையை பரிசீலிப்பதற்கு இயலுமாக இருப்பதுடன் செயன்முறையில் இன்னமும் சம்பந்தப் படுகின்றதாக உள்ள ஊழலை கண்காணிக்கவும் முடியுமென்பதைக் கருதுகிறது. மேலும், சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுகள் வரிசெலுத்துவோருக்கு கூடுதலாக அணுககூடிய வகையில் திருத்தப்படுதல் வேண்டும், அல்லது பிரஜைகள் வரவுசெலவுத் திட்ட எண்ணக்கருவுடன் ஒத்ததாக ஓர் இரண்டாவது ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும், இதனால் தேசிய வரவுசெலவுத் திட்டச் செயல்முறையில் எங்கே ஊழலும் முகாமைத்துச் சீர்கேடும் இடம்பெற்றுள்ளன என எப்போதும் இலகுவாக சுட்டிக் காட்ட முடியும்.

## தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் எதிர்காலம்

இத்தகைய விடயங்களிலிருந்து வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் தொடர்பாக பல பிரச்சினைகள் உள்ளன என்பது தெளிவாகின்றது என்பதுடன் வரிசெலுத்துவோர் வரவுசெலவுத் திட்டசுழற்சி வட்டம் மீது நம்பிக்கை கொள்ளவும் மற்றும் அதில் ஆர்வத்தைப் பேணவும் வேண்டுமாயின், ஜனநாயகம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அத்தகைய கரிசனைகளைத் தீர்ப்பதில் ஓரளவிற்கு உதவுதல் வேண்டுமென்பதுடன், தேசிய வரவுசெலவுத் திட்ட

முறைமையில் பிரஜைகள் ஈடுபாடு மற்றும் பங்குபற்றுதலை ஓரளவிற்கு நிலைநாட்டும் ஆற்றலையும் கொண்டுள்ளது. இந்த முறைமை பதிலிறுக்கும் தன்மை கொண்டதாக இருந்தாலும், பிரச்சினைகள் புதிதாக எழுகையில், அது அவற்றை விரைவாக இனங் கண்டு அவற்றில் கவனம் செலுத்துவதற்கான வழிகளைக் காண்பதற்கு இயலுமாக இருத்தலும் முக்கியமானதாகும். அத்தகையதொரு எதிர்வினை ஓர் கூடுதல் வெளிப்படைத் தன்மையான மற்றும் பொறுப்புக்கூறத்தக்க முறை மூலம் அபிவிருத்தி செய்யப்பட முடியுமென்பதோடு, பிரச்சினைகளைக் கையாள்வதிலான தங்களது ஆற்றலை மக்கள் பரிசீலணை ஊடாகவும் மற்றும் வரிசெலுத்துவோர் மற்றும் அரசாங்கம் எனடபவற்றுக்கிடையிலான உறவில் மேலும் நம்பிக்கை கொள்வதன் மூலமாகவும் பிரச்சினைகளை கவனத்தில் கொள்வதற்கு தீர்மானம் மேற்கொள்வோருக்கான ஊக்குவிப்பைத் தருகிறது. அத்தகைய விடயங்கள் உள்ளூர் மட்டத்திலும் கூட கவனத்தில் கொள்ளப்படுமாயின், அது பிரஜைகளின் தேவைகளைக் கவனத்தில் கொள்கின்ற, கூடுதல் வினைத்திறனானதும் மற்றும் ஜனநாயகரீதியிலுமானதொரு வரவுசெலவுத் திட்டச் செயல் முறையை உருவாக்கும்.

## எண்ணங்களும் பிரதிபலிப்புகளும்

இந்த ஆய்வறிக்கை தேசிய மற்றும் உள்ளூர் ஆகிய இரு மட்டங்களிலும் வரவுசெலவுத் திட்டச் செயன்முறையை, குறிப்பாக பிரதேச சபை வரவுசெலவுத் திட்டச் செயன்முறை சுற்றியுள்ள விடயங்களை விளக்குவதற்கு முனைந்தது. அது உருவாக்கம், நிறைவேற்றுதல் மற்றும் கணக்காய்வு போன்ற வரவுசெலவுத் திட்டச் செயல்முறையைச் சுற்றியுள்ள பல விடயங்களைச் சுட்டிக் காட்டியதுடன், பிரதேச சபைகளுக்கான வருவாய் உருவாக்கத்தின் செயல்முறைகளையும் பரிசீலித்தது. இந்த விடயங்கள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் மற்றும் ஊழல் ஆகிய கருப்பொருள்களைச் சுற்றிக் காணப்பட்டதுடன், அவை வரவுசெலவுத் திட்டச் செயன்முறையின் வினைத்திறனுக்கு முட்டுக்கட்டை இடுவதாகவும் காணப்பட்டன. மேலும், அது அரசியல்வாதிகள் அல்லது உள்ளூர் பிரதிநிதிகள் போன்ற, வரவுசெலவுத் திட்ட சுழற்சி வட்டத்திலுள்ள பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களின் கண்ணோட்டங்களை அளித்தது, இதனால் சுழற்சி வட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களின் நேரடி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகள் எழுப்பப்பட முடியும். இந்த அனைத்துப் பிரச்சினைகளினதும் இறுதி விளைவு கூடுதலான கண்காணிப்பு பொறிமுறை மற்றும் அதிகாரப் பகிர்வு என்பவற்றோடு, கூடுதலான வரிசெலுத்துவோரின் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு ஆகிய கருப்பொருள்களை பின்பற்றும் பல்வேறுபட்ட பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு எங்களை அனுமதித்தது. குறிப்பாக பிரஜைகளின் வரவுசெலவுத் திட்டம் வரவுசெலவுத் திட்டச் செயல்முறையில் வரிசெலுத்துவோர்களுக்கு ஓர் கூடுதலான ஈடுபாட்டைக் கொடுப்பதற்கான ஓர் பயனுறுதியான ஆற்றல் கொண்ட கொள்கைச் சாதனமாக சுட்டிக்காட்டப்பட்டதுடன், வரவுசெலவுத் திட்டமிடலின் அனைத்து மட்டங்களுக்கும் அத்தகையதொரு முறைமையின் ஏற்றுக்கொள்ளுதலை நாம் மிகவும் ஊக்குவிக்கிறோம்.

இந்தப் பரிந்துரைகள் தற்போது பொருத்தமானவையாக இருக்கையில், வரவுசெலவுத் திட்டம் எந்த விதத்திலும் நிலையானதல்ல என்பதாலும் மற்றும் பதிலுக்கு புதிய

கட்டமைப்புகள் மற்றும் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுகையில் மாற்றங்களுக்கு திறந்த தன்மை கொண்டது என்பதாலும், வேறு என்ன பிரச்சினைகள் எழுகின்றன என்பதைப் பார்ப்பதற்கு வரவுசெலவுத் திட்டச் செயல்முறையை காலத்தோடு இணைத்துக் கண்காணித்தல் முக்கியமானதாகும். எத்தகைய பிரச்சினைகள் எழுந்தாலும், எந்தவொரு தீர்வினதும் இலக்கு எப்போதும் பிரஜைகளுக்கு மிகவும் பயனுறுதியான வகையில் சேவையாற்றுவதாக இருத்தல் வேண்டுமென்பதோடு வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் வரிசெலுத்துவோரின் பங்கேற்றல் என்பன அத்தகைய தீர்வுகளின் மையத்தில் இருத்தல் வேண்டும்.

## Further Readings


- *Annual Budgets 2012 of Kuruwita PS of Ratnapura District and Yakkalamulla PS of Galle District, Sri Lanka*
- *A Study on JICA's Possible Cooperation for Capacity Building of Local Bodies under Decentralization*, (JICA, Kathmandu), Kafle, Mukti Prasad, 2003,
- Background Summary Paper for the Commonwealth High Level Symposium on Promoting inter-governmental relations and sharing of good practice policies on local government (South Asia), Colombo, Sri Lanka 24-25 April 2012
- Final Report of the Role of Media in Local Governance, 2010, Centre for Policy Alternatives.
- Goonawardena, A. S. 2002, Beyond Legal and Administrative Constraints Confronting Provincial Councils: Issues in Devolution and Governance change in Sri Lanka, Sri Lanka Institute of Local Governance, Colombo.
- Goonawardena,A.S.2006, Provincial Councils: Operational Experience of Devolution, A report of a Committee to study the Operation of Provincial Councils in Sri Lanka, Ministry of Cooperatives, Provincial Councils and Local Government, Colombo.
- Municipal Councils Ordinance Chapter 252 No. 29 of 1947
- National Policy on local government, ministry of local government and provincial councils, 2010

HMG/ Ministry of Law and Justice, 1999, *Local Self-Governance Act*, (HMG, Kathmandu)

- "Participatory Local Governance Six Propositions for development" IDS, paper presented to the Ford Foundation CoGo Program officers retreat, Gaventa, John (2001 -June)
- Participatory Budgeting, Toolkit for local governments in Albania, Social Development team, Europe and Central Asia Region, December 2006
- Pradeshiya Sabha Act, No. 15 of 1988
- Report of the Commission of Inquiry on Local Government Reforms (1999), Sessional Paper No. 1 of 1999 Colombo: Government of Sri Lanka.
- Provincial Councils Act, No. 42 of 1987
- The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, 1978
- The Institute of Professional Public Administration (2007) The Operational Experience of Fiscal Devolution and Provincial Finance in Sri Lanka: Challenges and Options in Getting to Devolution and multi-Level Governance, Colombo
- *Urban Councils Ordinance, Chapter 255 No 61 of 1939*

## அடிக்குறிப்பு

1. The Project *Reconnecting Citizens and Local Authorities in North* funded by USAID/RISEN
2. www.pclg.gov.lk
3. பிரிவு 169, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்
4. கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபை செயலாளரை நேர்காணல், 21 செப்டெம்பர் 2013
5. திரு. டி.பி. ஹெட்டியாராச்சி, முன்னாள் உதவிச் செயலாளர், மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சு
6. திரு. சந்திம லியனகே தலைவர், யக்கலமுல்ல பிரதேச சபை, காலி 14 ஆகஸ்ட் 2013
7. திரு. பி. ஆணைமுகன் தலைவர், காரைநகர் பிரதேச சபை யாழ்ப்பாணம் 16 ஆகஸ்ட் 2013
8. பஸ்ஸர, பதுளை பிரஜைகள் குழு தலைவர், செயலாளருடனான நேர்காணல் 20 செப்டெம்பர் 2013
9. ஹாலியல பிரதேச சபை பதுளை கிராமத்தவர்களும் வரி செலுத்துனர்கள் 10 ஜீலை 2013
10. லுணுகல, பதுளை பிரஜைகள் குழு தலைவர், செயலாளருடனான நேர்காணல் 20 செப்டெம்பர் 2013
11. திரு. பி. சஞ்சீவன் தலைவர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் 18 ஆகஸ்ட் 2013
12. செயலாளர், பூநகரி பிரதேச சபை, கிளிநொச்சி
13. திரு. பி. ஜயதிஸ்ஸ தலைவர், விவசாயிகள் முன்னேற்ற அமைப்பு, ஹிங்கக்கொட பொலன்னறுவை
14. கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபை செயலாளரின் நேர்காணல் 21 செப்டெம்பர் 2013
15. ஊடகங்களின் பங்களிப்பு உள்ளூராட்சி மன்றங்கள், வெளிக்கள பிரிவு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஆக்டோபர் 2012 கொழும்பு
16. திரு. சரத் கல்லகே, சுயாதீன எழுத்தாளர், திருகோணமலை 25 செப்டெம்பர் 2013
17. திரு. டி.பி. ஹெட்டியாராச்சி, முன்னாள் உதவிச் செயலாளர், மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சு
18. சமூதாய சபை பொதுக்கூட்டம், யக்கலமுல்ல 16 ஆகஸ்ட் 2012

**அட்டவணை 1**

தெற்காசிய நாடுகளில் காணப்படுகின்ற உள்ளூராட்சி தொடர்பான சட்டரீதியான ஆவணம் மற்றும்

| பிரதேச நிறுவனக் கட்டமைப்பு. | | |
|---|---|---|
| **நாடு** | **சட்டரீதியான ஆவணம்** | **நிறுவணக் கட்டமைப்பு** |
| இந்தியா | 73வது அரசியலமைப்பு சீர்திருத்தம் (1992)அனைத்து மாநிலங்களிலும் உள்ளுராட்சி மன்ற சட்டங்கள் உண்டு. 243 ப மற்றும் 234 ற உறுப்புரைகள் | கிராம சபை |
| பாகிஸ்தான் | அனைத்து மாகாணங்களிலும் உள்ளுராட்சி மன்ற சட்டம் முழுமையாக்கப்படும் வரை 2001 உள்ளுராட்சி சட்டங்கள் பிரதானமாக கருத்திற் கொள்ளப்படும். பலுகிஸ்தான் மாகாண சபை அதன் உள்ளுராட்சி மன்ற சட்டத்தை 2010ம் ஆண்டு நிறைவேற்றிக் கொண்டது. உறுப்புரை 32 மற்றும் 140 A | கிராம சபை, நெருக்கமான குழுக்கள், சனசமூக குழுக்கள் |
| பங்களாதேஷ் | The Hill District Local Government Parishad Act, 1989The Zila Government [Pourashava] Ordinance, 2009The Local Government [Upazila Parishad] Ordinance,2008The Local government City Cooperation Ordinance, 2008 | உபஷீலா பரிஷாத் பிரதிநிதிகள் மற்றும் சமூகக் குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய மக்கள் குழு யூனியன் பரிஷாத்களை அடிப்படையாகக் கொண்ட நிலையான குழுக்கள் |
| நேபாளம் | Gram Panchayat Acts – 2006,2013,2018 (BS),<br>கிராம அபிவிருத்திக் குழுச் சட்டம் – 2047, 2048 (BS)<br>Nepal State Nagarpanchayat Act 2006 (BS)Nepal State Nagarpanchayat Act 2009 (BS) | கிராம சபை<br><br>கிராம அபிவிருத்தி குழுக்கள் |

| | | |
|---|---|---|
| | Nagarpanchayat Act 2019 (BS), மாநகர சபை சட்டம் - 2047, 2048 (BS), District Panchayat Act 2019 (BS), மாவட்ட அபிவிருத்தி குழச் சட்டம் – 2047(BS), 2048 (BS), Zonal Panchayat Act – 2019 (BS), Zonal Sabha Act – 2024, 2035 (BS), அதிகாரப் பகிர்வு சட்டம் Act 2039 (BS) பிரதேச சுயாட்சி சட்டம் – 2055 (BS) | |
| இலங்கை | 1987 மாகாண சபைச் சட்டம்<br>1939 நகர சபைச் சட்டம்<br>1947 மாநகர சபைச் சட்டம்<br>1987/15 பிரதேச சபைச் சட்டம்<br><br>மேலதிக விபரங்களுக்கு இணைப்பு 1ஐ பார்க்கவும்<br><br>மேலே அட்டவனைக்காக இணைப்பு 2ஐ பார்க்கவும் | பிரஜைகள் குழு<br>மக்கள் சபை<br>மக்கள் சபை 2012 - இது முன் பிருந்த கிரா மோதய சபையாகும்.<br>நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் குழு<br>வீடு மற்றும் மக்கள் அபிவிருத்தி குழு<br>அபிவிருத்தி மற்றும் தொழிநுட்ப சேவைக் குழு மற்றும்<br>சுற்றாடல் மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பான குழு |
| மாலைத்தீவு | அதிகாரப் பகிர்வு சட்டம் 2010<br>மாகாண சபை தேர்தல் சட்டம் | நிறுவனக் கட்டமைப்புக்கள் இதுவரை (BS) உறுவாக்கப்படவில்லை |
| சிறியானி விஜேசுந்தர, மாற்றுக் கொள்கைக்கான நிலையம் 2012 | | |

## Annexure 2 Time Schedule for the Budgets in Local Authorities / Budget Call

| No | Purpose | Target Date | Responsibility |
|---|---|---|---|
| 01 | Issuing requests to formulate the Budget | $15^{th}$ April | Municipal Commissioner/ Secretary |
| 02 | Presentation of members and ward committee proposals | $30^{th}$ June | Ward Committees and Members |
| 03 | Presentation of programe expenditure and revenue | $30^{th}$ June | Programme Heads |
| 04 | Preparation of preliminary estimates | $01^{st}$ July | Accountant/Book Keeper/ Budget officer |
| 05 | Obtaining advices from the finance committee | $31^{st}$ July | Municipal Commissioner/ Secretary |
| 06 | Review of the estimates | $01^{st}$ August | Mayor/Chairman |
| 07 | Decide budget policies and present to the council | $31^{st}$ August | Mayor/Chairman |
| 08 | Preparation of the budget estimates – programe based | $30^{th}$ September | Program Heads |

| | | | |
|---|---|---|---|
| 09 | Preparation of final budget estimates and drafting the budget | 31st October | Accountant/Book Keeper/ Budget officer |
| 10 | Observe the draft budget by financial standing committee | 01st November | Municipal Commissioner/ Secretary |
| 11 | Preparation of the budget message | 20th November | Mayor/Chairman |
| 12 | Presentation of draft budget to the council | 30th November | Mayor/Chairman |
| 13 | Second reading of the draft budget, if necessary | 10th December | Mayor/Chairman |
| 14 | Approval of the draft budget | 15th December | Council |
| 15 | Printing and circulating the draft budget | 31st December | Municipal Commissioner/ Secretary |

**அட்டவணை 3**

**வரி செலுத்துவோர், சிவில் சமூகம் மற்றும் பாதீடு தொடர்பான ஆய்வாளர்களுக்கும் வரவு செலவு திட்டத்திற்கு அழுத்தம் வழங்கக் கூடிய வழிகள்**

- **வரவு செலவுத் திட்ட தயாரிப்பு**
  - பிரதிபலன்மிக்க செயற்திட்டங்களை அடையாளம் காண்பதற்காக பொதுப் பிரச்சினைகளை கலந்துரையாடல்
  - செயற்திட்ட யோசனைகளை முன்வைத்தல்
  - முன்வைக்கப்படுகின்ற யோசனைகள் மதிப்பீடு செய்வதற்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒத்துழைத்தல்
  - செயற்திட்ட முன்னுரிமைப்படுத்தல் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்
- **அனுமதி அளித்தல்**
  - மக்கள் கலரியில் இருந்தவாறு வரவு செலவு திட்டத்தில் பங்குபற்றல்
  - வரவு செலவுத்திட்ட முன்மொழிவு மக்கள் கருத்திற்காக முன்வைக்கப்படும் போது முன்மொழிவு செயற்திட்ட யோசனைகள் தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்தல்
- **நடைமுறைப்படுத்தல்**
  - வரவு செலவு திட்டத்தில் அனுமதித்தவாறு அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெறுகிறதா என்பதை கவனித்தல்
  - குறைநிரப்பு யோசனை தொடர்பில் அவதானமாக இருத்தல்
  - வரவு செலவு திட்டத்தில் அனுமதித்தவாறு செலவுகள் மேற்கொள்ளப்படுவதை கவனித்தல்

- பிரதேச சபைகளுக்கு செலுத்தப்படுகின்ற வரி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக அவதானமாயிருத்தல்

- **கணக்காய்வு / செயற்பாட்டு மேற்பார்வை**
  - கணக்காய்வாளரால் மக்கள் பிரதிநிதிகளுக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் முன்வைக்கப்படும் வரவு செலவு மேற்பார்வை தொடர்பாக அவதானமாக இருத்தல்
  - வரவு செலவை திருத்தம் செய்வதற்குத் தேவையான தகவல் மற்றும் தரவுகளை வழங்க ஒத்துழைத்தல்

மக்களது நிலையான அபிவிருத்தியின் பொருட்டு பரந்தளவிலான மக்களது பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும். உள்ளூராட்சி செயற்பாடுகளில் பரந்தளவிலான மக்கள் பங்களிப்பின் காரணமாக கிடைக்கும் பிரதிபலன்கள் அதிகமே. பிரதேசத்தில் வளங்கள் மற்றும் சேவைகள் நியாயமான முறையில் பகிரப்படுகையில் மற்றும் கட்டுப்படுத்துகையில் இலகுவாக அமையப்பெறுவதோடு பயனாளிகளின் ஒத்துழைப்பை பெறுவதற்கும் அதன்போது ஏற்படும் போட்டி நிலைமையை கட்டுப்படுத்துவதற்கும் ஏதுவாக அமையும்.

**வரைபடம் 1**



இலங்கையில் சில பிரதேச சபைகளில் இக் கட்டமைப்புக்கள் மூலமாக நிர்வாக செயற்பாடுகளில் பெருமதியானதும் புதியதான மாற்றங்களை ஏற்படுத்தவும் இருவழிச் சேவை வழங்கலை நம்பிக்கையுடன் மேற்கொள்ளவும் முன்வந்திருக்கின்றன.

அபிவிருத்தி செயற்பாடுகளின் ஆரம்பமானது தேசிய அல்லது மாகாண மட்டத்திலும் பார்க்க, மக்களுடன் காணப்படுகின்ற நெருக்கும், அதிகார எல்லையின் விரிவு, சட்டரீதியான அடிப்படை என்பவற்றைப் பார்க்கும் போது உள்ளூராட்சி மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இக் கட்டுரையாளர் தமது கட்டுரையினூடாக தெளிவுபடுத்துகின்றார்.

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் பிரதேச சபையானது 1987 ம் ஆண்டு 15ம் இலக்க சட்டரீதியினூடாக வலுவடைந்துள்ள ஒரே சட்டரீதியான நிறுவனமாக இருப்பதோடு மக்களது குரலுக்கு மிக நெருக்கமானதுமான நிர்வாக நிறுவனம் என்றபடியில் செயல்மிகு மக்கள் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் முன்மாதிரியான அமைப்பாக விளங்குகின்றது.

பிரதேச மட்டத்தில் மக்களுக்குத் தேவையான வளங்கள் சமமான முறையில் பகிரப்படுமானால் பங்களிப்பு நல்லாட்சியின் வெற்றியை அடைந்து கொள்ள முடியாது. பங்களிப்பு வரவு செலவு திட்ட செயற்பாட்டின் மூலம் வளங்களை சமமாக பகிர்வதற்கான வலுவான பின்னணியை பெரும்பாலும் ஏற்படுத்த முடியும். இதனூடாக மக்களுடைய தேவைகளை முன்னுரிமைப்படுத்திய பாதீட்டை தயாரிக்க முடிவது அபிவிருத்தி செயற்பாட்டில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிற்கு செயல்மிக்கதாக பங்களித்தல் மற்றும் பங்குபற்றுலுடனான வரவு செலவு திட்டத்தின் மூலமாகவே.

உள்ளூராட்சி மன்றம் என்ற வகையில் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் பாதீடு செயற்பாட்டின் அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் காணப்படுகின்ற தீர்மானம் எடுக்கும் பொறிமுறையின் பொருட்டு மக்களது பங்களிப்பை வலுவூட்டுவதற்காக இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ள நடைமுறைச் சாத்தியமான கருவியாக இருப்பது பங்களிப்பு

பாதீடாகும். இதனூடாக பொதுமக்களது நிதிக் கையாளுகையானது வெளிப்படைத்தன்மை தெளிவடைவதற்கும் சமூக வகை பொறுப்பின் வழிகாட்டுனர் என்ற வகையிலும் பங்களிப்பு வரவு செலவுத் திட்டம் மிக முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது.

**அட்டவணை 4**

| இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் அமைப்பு வியூகம் | | |
|---|---|---|
| **உள்ளூராட்சி மன்றம்** | **எண்ணிக்கை** | **நிலப் பரம்பல்** |
| **மாநகர சபை** | 23 | 7% |
| **நகர சபை** | 41 | 12% |
| **பிரதேச சபை** | 271 | 81% |
| மொத்தம் | **335** | **100** |

பங்களிப்பு வரவு செலவு திட்டத்தினூடாக வலுவடைகின்ற பங்களிப்பு தீர்மானம் எடுத்தல் செயற்பாடு உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் நிதி வளத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு நேரடியாக ஒத்துழைப்பு நல்கின்ற அதே வேளை பிரதேச சபை உட்பட உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச வரி செலுத்துவோருக்கிடையிலான சமூக பிணைப்பை அதிகரிக்க ஏதுவாக அமைகின்றது. இதன் காரணமாக உள்ளூராட்சி மன்ற செயற்பாட்டுடன் தொடர்பற்று இருக்கும் மக்கள் தொடர்புறுவதற்கும் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அரச அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளது வகைகூறல் மற்றும் தெளிப்படைத்தன்மையை அதிகரிகக் வைப்பதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

மேலும் மக்களுக்கு பிரதேச மட்டத்தின் சேவை வழங்குவதில் ஈடுபட்டுள்ள அரச அலுவலர்கள் மற்றும் பிரதேச மக்கள் பிரதி நிதிகளோடு ஏற்படுகின்ற தொடர்புகள் மற்றும் செயலுக்கான பங்களிப்பு அதிகரிப்பதற்கான சந்தர்ப்பமும் இதனால் ஏற்படுகின்றது. ம□ோர் மற்றும் க்ரூக் ஆகிய ஆய்வாளர்களினால் இந்தியாவில் மக்கள் பங்களிப்பிற்கு பங்களிப்பு செயற்பாட்டின் அழுத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விடயம் என்ற அறிக்கையினூடாக (பக்கம் 29-30 ஆண்டு 1988) மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 5**

உள்ளூராட்சி மன்றங்களில் பங்களிப்பு வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 5 வருட காலப்பகுதியினுள் 101 பிரதேச சபைகளில் குறிப்பிட்டுக் கூறும் அளவிலான சிறந்த பிரதிபலன்களை அடையாளம் காண முடிந்தது.

1. வரவு செலவுத்திட்ட பூர்வாங்க கலந்துரையாடல்களுக்கு பெறுமதியான மக்களது பங்களிப்பு
2. மக்கள் பிரதிநிதிகள் சபை சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல்
3. சபையில் வரவு செலவுத் திட்டத்தின் போதும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் வரி செலுத்துபவர்களது பங்களிப்பிற்கும், யோசனைகள் மற்றும் கருத்துக்கள் வழங்க சந்தர்ப்பம் கிடைக்கின்றமை
4. சபையால் வரவு செலவுத்திட்ட கால அட்டவணை உரிய முறையில் பின்பற்றப்படுகின்றமை (இணைப்பு 3)
5. மக்களுக்கு நட்பு ரீதியிலான சேவை வழங்கல்
6. தவிசாளர் எதிர்க்கட்சி தலைவர் உட்பட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் கட்சி பேதமின்றி ஒரே குழுவாக செயற்படல்
7. சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் சபையில் அமர்தலும் ஆசன ஒதுக்களும் ( இணைப்பு 4)

8. பிரதான குழுக்களுக்கு மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்ள் வழங்கும் செயல்மிகு பங்களிப்பு

9. தலைவர் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் தனியாக தீர்மானம் எடுப்பதைத் தவிர்த்து பங்களிப்பு தீர்மானம் எடுப்பதில் கரிசனை காட்டல்

10. மக்களது தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி தீர்மானம் எடுத்தல் மற்றும் சபையால் நடைமுறைப்படுத்துகின்ற செயல்றிட்டங்களுக்கு மக்களது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கல்

11. வரி சேகரிப்புக்களில் கணிசமான முன்னேற்றம் ஏற்படல். இதனூடாக மக்கள் மத்தியில் சபை தொடர்பில் காணப்பட்ட நம்பிக்கையின்மையில் மாற்றம் ஏற்படல் தெளிவாகும்

12. சிறந்த முகாமைத்துவம் மற்றும் நிலையான வருமானத்திற்கு தேவையான அனைத்து வருமான மூலங்களையும் பயன்படுத்துதல்

**அட்டவணை 6**

## வெளிப்படைத்தன்மையுடனான உள்ளூராட்சியின் பொருட்டு பங்களிப்பு பாதீடு

உள்ளூராட்சி தமது சுற்றுப்புறச் சூழலின் யதார்த்தங்கள் மற்றும் அனுபவங்களுக்காக நல்லாட்சியை சிறந்த முறையில் கற்கக் கூடியமிகப் பொருத்தமான பயிற்சி நிறுவணமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. உள்ளூராடசியானது அரச நிர்வாகத்தில் மூன்றாம் கட்டத்தில் காணப்படினும் அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் பிரதேச மக்களுக்கு அரச சேவை மற்றும் பிரதிபலன்களை பெற்றுக் கொடுக்கும் முக்கியமான ஒரு ஊடகமாகவே கருதப்படுகின்றது. உள்ளூராட்சி கட்டமைப்பில்லாத எந்தவொரு அரசியல் கட்டமைப்பும் முழுமையானதும் ஜனநாயகமானதுமாக நிச்சயம் இருக்கமாட்டாது. (பீ.பொவென்கா, பிரிடோரியா பல்கலைக்கழகம் 2002)நல்லாட்சி தொடர்பில் பெரும்பாபாலான பார்வை 1980 மற்றும் 90களில் ஆரம்பிக்கப்பட்டாலும் மக்கள் மற்றும் அரசிற்கிடையில் காணப்பட வேண்டிய தொடர்புகள் மிக அண்மித்த காலப்பகுதியிலேயே ஏற்படலானது. எனவே 21ம் நூற்றாண்டின் மிக முக்கியமான சவாலாக அமையப்போவது அரச மற்றும் விசேடமாக பிரதேச அரசு மக்களுக்கிடையில் ஏற்பட வேண்டிய புதிய தொடர்புகளை கட்டியெழுப்புவது என ஜோன் கவெண்டோ 2001ம் ஆண்டு ஆணித்தரமாக முன்வைக்கிறார்.

தேசிய மட்டத்திலான அபிவிருத்தி செயற்பாடுகளின் போது பல்வேறான பிரச்சினைகள் காணப்படுவதாகவும், இதன் காரணமாக மத்திய அரசு கையாளுகின்ற மேலிருந்து கீழாக மேற்கொள்ளப்படுகின்ற முன்னுரிமை அபிவிருத்தித் திட்டமிடல் பயன்மிக்கதாக அமையாது என்பது இதனூடாக தெளிவாகின்றது. இந் நிலைமையானது தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினுள் மக்களது பங்களிப்பு மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் பிரதேச மக்கள் அல்லது வறிய பயனாளிகளின் தேவைப்பாடுகள் தொடர்பில்

காணப்பட்ட குறைபாடுகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாத நிலையானது சிக்கலான ஒரு விடயம் என்பது தெளிவாகின்றது.

அவ்வாறான அரசுகள் மக்கள் தொடர்புடனான அபிவிருத்தி செயற்பாடுகளில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினுள் மக்கள் பங்களிப்பை பெறுவதனூடாக மேலும் வினைத்திறன் அடைகின்ற அதேவேளை அந் நிலைமையானது பங்களிப்பு நல்லாட்சிக்கு தடையில்லாத பாதையாக அமைவதற்கு ஏதுவாக அமையும்.

கொள்கை தயாரிப்பு, ஏற்புடையதாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் ஒட்டுமொத்தமாக தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினுள் மக்களுடைய முழுமையான பங்களிப்பை மிகத் தெளிவாக மேற்பார்வை செய்ய பெரும்பாலும் மிகச் சிறந்த இடமாக பிரதேச மட்டம் விளங்குகின்றது. இதற்கான காரணமாக அமைவது கீழ் மட்ட எதிர்பார்ப்புக்கள் அல்லது பிரதேச விருப்பு வெறுப்புக்கள் நேரடியாகவும், நல்லாட்சி மற்றும் அரசிற்கிடையில் பரிமாற்றம் செய்யப்படுவது பிரதேச மட்டத்திலேயே என்பதனாலாகும்.

எனவே பிரதேச அரசு எனப்படும் மூன்றாம் நிலையிலான நிர்வாக கட்டமானது மிகப் பொருத்தமான நிர்வாக கட்டமைப்பாகவும், அதிகாரப் பகிர்வின் மிக வலுவான பொறிமுறையாகவும், ஒட்டுமொத்த அபிவிருத்தி செயற்பாட்டின் போது பரந்தளவிலானதும் முழுமையானதுமான மக்கள் பங்களிப்பிற்கு அவசியமான வலுவானதும் வெளிப்படையானதுமான சந்தர்ப்பத்தை பெற்றுத்தரும்.

இது தொடர்பில் தெற்காசிய நாடுகளைப் பரிசீலனை செய்யும் போது பெரும்பாலான நாடுகளில் அந்தந்த நாடுகளாலேயே உருவாக்கிக் கொள்ளப்பட்ட நிறுவனக் கட்டமைப்புக்கள் அந்தந்த நாடுகளுக்கே உரியதான சட்ட வரையறைகளையும் அதிகாரப் பகிர்வையும் நடைமுறைப்படுத்தியுள்ளன.